


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 189 20.02.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 189 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(20–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–8
பிறை: வளர்பிறை
திதி
திருதியை பிற்பகல் 3.53
வரை பிறகு சதுர்த்தி
நட்சத்திரம்:
உத்திரட்டாதி இரவு 9.19
வரை பிறகு ரேவதி
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி.
சூலம் – மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி

மேஷம் .................. செலவு
ரிஷபம் ...................... சுபம்
மிதுனம் ..................... வரவு
கடகம் ..................... சுகம்
சிம்மம் ................ பாராட்டு
கன்னி ................... உயர்வு
துலாம் .................. கடமை
விருச்சிகம் ............ தெளிவு
தனுசு ..................... முயற்சி
மகரம் .................. ஆக்கம்
கும்பம் .............. உழைப்பு
மீனம் ........................ பக்தி

# ஏ.ஐ. உச்சி மாநாட்டை தொடக்கி வைத்தார் மோடி!

புதுடில்லி,பிப்.20:

செய்யறிவு (ஏஐ) தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டின் நிகழ்வுகளை தில்லி பாரத மண்டபத்தில் பிரதமா நரேந்திர மோடி இன்று காலை தொடக்கிவைத்தார்.

தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதமா மோடியுடன் ஐ.நா. பொதுச் செயலா அன்டோனியோ குட்டெரெஸ், பிரான்ஸ் அதிபா இமானுவல் மேக்ரான், பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில், பங்கேற்கும் பல்வேறு நாட்டுத் தலைவாகளுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும், நிர்வாகம், உள்கட்டமைப்பு, சாவதேச ஒத்துழைப்பு என ஏஜ தொழில்நுட்பத்தின் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகள் குறித்த விவாதம் நடைபெறவுள்ளது.

மக்கள், பூமி மற்றும் முன்னேற்றம் ஆகிய மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவாகள், 60 அமைச்சாகள் உள்பட பல்வேறு நாடுகளைச் சோ்ந்த 100-க்கும் மேற்பட்ட அரச பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனா்.







## கின்னஸ் சாதனையாக இந்தியாவில் 2.5 லட்சம் பேர் ஏஜ பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான உறுதிமொழி ஏற்பு!

கின்னஸ் உலக சாதனையாக இந்தியாவில் செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்துவது என்ற உறுதிமொழியை 24 மணி நேரத்தில் 2.5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் எடுத்துக் கொண்டது அமைந்துள்ளது என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இண்டல் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து பிப்ரவரி 16 ஆம் தேதி நாடு தழுவிய ஏஜ பொறுப்பு உறுதிமொழி இயக்கம் தொடங்கியது. aipledge.indiaai.gov.in என்ற இணையதளம் மூலம் செயற்கை நுண்ணறிவை நெறிமுறையுடனும், பொறுப்புடனும் பயன்படுத்துவது என்ற உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்திய செயற்கை நுண்ணறிவுத் தாக்க உச்சிமாநாட்டையொட்டி நடத்தப்பட்ட இந்த உறுதிமொழியை பிப்ரவரி 16 மற்றும் 17 ஆம் தேதிகளில் 2,50,946 பேர் எடுத்துக்கொண்டனர்.


இதன் மூலம் நம்பகமான மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட ஏஜ சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான இந்தியாவின் தொலைநோக்கு பார்வையை வலுப்படுத்தியது. உறுதிமொழியை ஏற்றுக்கொண்டவர்கள் டிஜிட்டல் பேட்ஜ் மற்றும் ஏஜ கற்றல் பாதைகளுக்கான அணுகலைப் பெற்றனர்.

பாரத மண்டபத்தில் நடைபெறும் இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு (ஏஜ) தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டின்போது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், கூடுதல் செயலாளர் ஸ்ரீ அபிஷேக் சிங், கின்னஸ் உலக சாதனை மதிப்பீட்டாளர் பிரவீன் படேல் உள்ளிட்டோர் இந்த சாதனையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், செயற்கை நுண்ணறிவின் பொறுப்பான மற்றும் நெறிமுறை பயன்பாட்டில் இளைஞர்களை ஈடுபடுத்தும் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு பாராட்டு தெரிவித்தார். "கல்லூரிகளை அணுகுதல், ஆசிரியர்களுடன் கலந்துரையாடுதலில் ஈடுபடுதல், சமூகத்தின் நன்மைக்காக - நமது வாழ்க்கையை மேம்படுத்தும் தொழில்நுட்பமாக செயற்கை நுண்ணறிவை ஒரு கருவியாகப் பயன்படுத்தவும், அது பொறுப்புடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் இந்த உறுதிமொழியை எடுக்க மாணவர்களை ஊக்குவிக்கவும் அவரது தொலைநோக்குப் பார்வை எங்களைத் தூண்டியது.

செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்துவது என்ற உறுதிமொழியை ஏற்றுக் கொண்ட இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரு சிறப்பு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார். இது உண்மையிலேயே நாட்டிற்கான பெருமையான தருணம். செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தை நோக்கி - நாடு நடைபோட வேண்டிய திசை இது என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ந்துவரும் ஏஜ தொழில்நுட்பத்தால் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறியும் நோக்கில் பிரிட்டனின் ப்ளெட்ச்லி பூங்காவில் 2023-இல் ஏஜ பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. அதன்பிறகு தென்கொரிய தலைநகர் சியோலில் 2024-ஆம் ஆண்டும், பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் 2025-ஆம் ஆண்டும் ஏஜ மாநாடுகள் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக 2026 - இல் 35 வயதுக்குள்பட்ட 65 சதவீத இளைஞர்களைக் கொண்ட இந்தியாவில் ஏஜ தாக்க உச்சிமாநாடு நடைபெற்று வருகிறது.

## சமூக வலைதளங்களை 16 வயதுக்கு உட்பட்டோர் பயன்படுத்தத் தடை? மத்திய அரசு பரிசீலனை



புதுடெல்லி,பிப்.20:

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வயது அடிப்படையில் கட்டுப்பாடு கொண்டு வருவது குறித்து பல்வேறு சமூக வலைதள நிறுவனங்களுடன் அரசு ஆலோசனைகளை நடத்தி வருகிறது.

ஒவ்வொரு நாட்டின் கலாசார சூழலையும் பன்னாட்டு நிறுவனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். டீப்ஃபேக் காணொலிகளைக் கண்டறிந்த 3 மணி நேரத்திற்குள் நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட புதிய விதிகள் ஏற்கெனவே அமலில் உள்ளன. தற்போது 'டீப்ஃபேக்' எனப்படும் போலி காணொலிகள் மற்றும் வயதுக் கட்டுப்பாடுகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இவ்வாறு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

உயரதிகாரி ஒருவர் கூறுகையில், “இப்போதுள்ள சூழ்நிலையில் சிறுவர்களுக்கு சமூக வலைதள அனுமதி அவசியமா என்பது குறித்து மிகுந்த கவனத்துடன் முடிவெடுக்க வேண்டியுள்ளது. ஆஸ்திரேலியாவில் பின்பற்றப்படும் நடைமுறைகளை அரசு ஆய்வு செய்து வருகிறது. எனினும், ஆஸ்திரேலியாவைப் போல 16 வயதுக்கு உட்பட்டோருக்கு முழுமையான தடை விதிக்கும் எண்ணம் எதுவும் மத்திய அரசிடம் தற்போதைக்கு இல்லை.

2021-ம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக ஒழுக்க நெறிமுறைகள்) விதிகளில் இதற்காக திருத்தங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது” என்றார்.

# திமுக கூட்டணியில் இணைந்தது தேமுதிக!



சென்னை,பிப்.20:

அதிமுக கூட்டணியில் இருந்து வந்த தேமுதிக, கடைசி நேர திருப்பமாக, திமுக கூட்டணியில் இணைந்துள்ளது. பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்து தேமுதிக போட்டியிட உள்ளது.

கட்சித் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை திமுக கூட்டணியில் இணையாத தேமுதிக முதல் முறையாக இணைந்திருப்பது, திமுக கூட்டணிக்கு பலம் சேர்த்திருப்பதாகவே கூறப்படுகிறது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில், தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினை, தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா, பொருளாளர் சுதீஷ் உள்ளிட்டோர் சந்தித்துப் பேசினர்.

இந்த பேச்சுவார்த்தையில், திமுக கூட்டணியில் தேமுதிக இணைவது உறுதி செய்யப்பட்டது. மு.க. ஸ்டாலினுக்கு சுதீஷ் பொன்னாடை போர்த்தினார். கூட்டணியில் இணைந்த தேமுதிகவை வரவேற்கும் வகையில், பிரேமலதாவுக்கு முதல்வர் ஸ்டாலின் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்பைத் தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணியிலிருந்து கச்சிதமாகப் பேசி தேமுதிகவை, திமுக பக்கம் கொண்டு வந்திருக்கிறார் எ.வ. வேலு என்றும் பேசப்படுகிறது.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் அதிமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டு வரும் தேமுதிக, தற்போது 2026ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியில் இணைந்திருக்கிறது. இது இரு கட்சிகளுக்குமே சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள்.

ஏற்கனவே, தேமுதிக கூட்டணிப்பேச்சுவார்த்தையை ஒரு பக்கம் அதிமுக, மறுபக்கம் திமுக என இரண்டு பக்கத்திலும் பேசி வருவதாக சர்ச்சை எழுந்தது.

இந்த நிலையில்தான், அதிமுக கூட்டணியிலிருந்த தேமுதிக இன்று திமுகவில் இணைந்திருக்கிறது. தேமுதிகவை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற பாஜகவின் எண்ணம் நிறைவேறாமல் போயிருக்கிறது.

## நல்வரவு – நல்லுறவு: தேமுதிகவை வரவேற்கும் மு.க. ஸ்டாலின்

நல்வரவு - நல்லுறவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக்குப் பங்களிக்கட்டும் என்று திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்திருப்பதை வரவேற்பு திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு முதல் அதிமுக கூட்டணியில் இருந்து வந்த தேமுதிக, கடைசி நேர திருப்பமாக, திமுக கூட்டணியில் இணைந்துள்ளது. 2026 பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்து தேமுதிக போட்டியிட உள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று திமுக தலைவரை சந்தித்தனர் தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா மற்றும் பொருளாளர் சுதீஷ் ஆகியோர். சந்திப்புக்குப் பின் கூட்டணி உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில், மு.க. ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் தேமுதிகவை வரவேற்று பதிவிட்டுள்ளார்.

அதில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான 'கேப்டன்' விஜயகாந்த் அவர்கள் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், இன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது என்று திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான 'கேப்டன்' விஜயகாந்த் அவர்கள் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், இன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது!

சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத்... PIC.TWITTER.COM/N7Q-D7Ex8UH— M.K.STALIN - தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் (@MKSTALIN) FEBRUARY 19, 2026

சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத் தற்போது திறமையாக வழிநடத்தி வரும் பொதுச்செயலாளர் அன்புச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களையும், அக்கட்சியின் நிர்வாகிகளையும் வருக வருக என வரவேற்கிறேன்.

கருப்பு சிவப்பைக் கொடியில் தாங்கியிருக்கும் தங்களது நல்வரவு - நல்லுறவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக்குப் பங்களிக்கட்டும் என்றும் பதிவிட்டுள்ளார்.மேலும், திராவிட மாடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம் என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## அண்ணன் ஸ்டாலின்!! திமுக கூட்டணியில் இணைந்தது ஏன்? பிரேமலதா விளக்கம்

திமுகவுடன் கூட்டணி அமைத்தது குறித்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் விளக்கம் அளித்துள்ளார்.

அதிமுக கூட்டணியில் இருந்து வந்த தேமுதிக, கடைசி நேர திருப்பமாக, திமுக கூட்டணியில் இணைந்துள்ளது. பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்து தேமுதிக போட்டியிட உள்ளது.

கட்சித் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை திமுக கூட்டணியில் இணையாத தேமுதிக முதல் முறையாக இணைந்திருப்பது, திமுக கூட்டணிக்கு பலம் சேர்த்திருப்பதாகவே கூறப்படுகிறது.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்து பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

”தேமுதிக யாருடன் கூட்டணி அமைக்கப் போகிறது என்ற கேள்விக்கு இன்று அதிகாரப்பூர்வமாக பதில் வழங்கியுள்ளோம். தேமுதிக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் விருப்பத்தின் பேரில் திமுகவுடன் கூட்டணி



அமைத்துள்ளோம்.

விஜயகாந்த் இருக்கும்போதே 2016 இல் அமைய வேண்டிய கூட்டணி இது. பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று அப்போது கருணாநிதி கூறினார். தற்போது விஜயகாந்த் இல்லாத நிலையில், திமுகவுடன் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

தேமுதிக சார்பில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேசுவதற்கு குழு அமைத்து திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். இரு கட்சி நிர்வாகிகளும் ஆலோசித்த பிறகு, தேமுதிகவுக்கு எத்தனை இடங்கள், எத்தனை தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது குறித்து அண்ணன் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பார்.

இன்றிலிருந்து திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம் என்பதை உறுதி செய்துள்ளோம்.

எங்களின் கூட்டணி 200 க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். தேமுதிகவுக்கு மாநிலங்களவை இடம் வழங்குவது குறித்து முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பார்” எனத் தெரிவித்தார்.

மேலும், முதல்வர் ஸ்டாலினுடனை சந்தித்த புகைப்படங்களை பகிர்ந்து எக்ஸ் தளத்தில் பிரேமலதா பதிவிட்டிருப்பதாவது:

”முத்தமிழறிஞர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவர் நமது தலைவர் 'கேப்டன்' விஜயகாந்த். திராவிட மாடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம்! வெல்வோம் ஒன்றாக!” எனப் பதிவிட்டுள்ளார்.

## திருவோணம் சுவாமி புறப்பாடு



தஞ்சாவூர், பிப்.20:
தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் அமைந்துள்ளஶ்ரீதேவி பூதேவி ஶ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஶ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (16.02.2026) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி ஆஸ்தான புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர்.

செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச் சாவடி, தஞ்சாவூர்

## சோளியம்மன் பொங்கல் திருவிழா









ஈரோடு, பிப்.20:
ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் துய்யம்பூந்துறைக் கிராமம் ஆண்டுக்கொத்தாம்பாளையம் அருள்மிகு சோளியம்மன் கோவில் திருவிழா அண்மையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலம், கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து பூந்துறை காடைகுலம் மற்றும் ஆவன்குலம் மக்கள் தங்களது குலதெய்வ வழிபாடு செய்ய ஆண்டு தோறும் இங்கு வந்து வழிபட்டு செல்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு கூடுகிறார்கள் மலர் அலங்காரத்தில் ஶ்ரீ விநாயகர், ஶ்ரீ கரியகாளியம்மன், ஶ்ரீவேலகவுண்டர் அய்யன், ஶ்ரீசோளியம்மன், ஶ்ரீகன்னிமார், ஶ்ரீகருப்பண்ணசாமி சாமிகள் கண்ணைக் கவரும் வண்ணம் இருந்தன.

இந்த சோளியம்மன்- வேலகவுண்டர் தெய்வங்கள் முன்னர் உண்மையில் நடந்த சம்பவம் என்ற காரணத்தால் பக்தர்கள் பயபக்தியுடன் தரிசனம் செய்து வருகின்றனர். பொங்கல் திருவிழாவை முன்னிட்டு மூன்று நாட்கள் கோவில் திருப்பணிகள் குழுவினர் மூலம் அனை வருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.பொங்கல் திருவிழா முடிந்த பின்னர் மறு பூஜை நடைபெற்று விழா இனிதே நடைபெற்றது

## அங்காளம்மன் திருக்கோவிலில் நாளை திருத்தேர் உற்சவம்



விழுப்புரம், பிப்.20:
விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம் மற்றும் நகரம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலில் நாளை 21.02.2026 (சனிக்கிழமை) நடைபெற உள்ள திருத்தேர் உற்சவத்தை முன்னிட்டு அன்று ஒரு நாள் மட்டும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது.

மேற்படி தினத்தில் அவசர் அலுவல்களை கவனிக்கும்பொருட்டு விழுப்புரம் மாவட்ட கருவூலமும் மற்றும் அனைத்து சார்நிலைக் கருவூலகங்களும் குறைந்த பணியாளர்களைக் கொண்டு இயங்கும் எனவும், மாணவ/ மாணவியர்களுக்கு 21.02.2026 அன்று பள்ளி/கல்லூரி இறுதித் தேர்வுகள் நடைபெற தேதி நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அந்த தேர்வுகள் அன்றைய தேதியில் வழக்கம்போல் நடைபெறும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இனி ஆண்டுதோறும் ரூ.2000 கோடைக்கால சிறப்பு நிதி– அமைச்சர் கீதா ஜீவன்



சென்னை, பிப்.20:
இனி ஆண்டுதோறும் கோடைக்கால சிறப்பு தொகையாக ரூ.2,000 வழங்கப்படும் என சட்டப்பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்குவதால் திமுக அரசு கோடைக்கால சிறப்பு நிதி வழங்கியதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்த நிலையில் புதிய அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோடைக்காலம் வர உள்ளதால் வெயில் காரணமாக ஏற்படும் மருத்துவசெலவுக்கு இந்த நிதி உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணி



திருப்பத்தூர், பிப்.20:
திருப்பத்தூர் மாவட்டம் அம்பலூர் ஊராட்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர்ஆனந்த் MBA MP தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 11,00000 (பதினொன்று லட்சம்) மதிப்பீட்டில் பஸ்நிலையத்தில் புதிய பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியை ஊராட்சி மன்ற தலைவர் A.P.முருகேசன் பூமிபூஜை செய்து துவக்கிவைத்தார்,

துணைதலைவர் நர்மதா நந்தகோபால், திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் A.T.மனோகரன்,ஜமீன் சௌந்தரராஜன், A.C.இரவி,கங்காதுரை,வார்டு உறுப்பினர்கள் V.செல்வநாயகி,D.சுஜாதா,R.சபிதா,R.பார்வதி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## புதிய கட்சியை தொடங்கினார் பண்ருட்டி ராமச்சந்திரன்



சென்னை, பிப்.20:
முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் சென்னையில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் ஒருபுறம் அடையாள அரசியலும், மற்றொரு புறம் கொள்கை அரசியலும் சூறாவளி போல் சுழன்று கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் ஒரு புதிய இயக்கத்தை நாங்கள் தொடங்குகிறோம்.

எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கியுள்ளோம். சாதி சமயம் மதத்தை தவிர்த்து புதிய சமுதாயத்தை அமைப்பது இந்த இயக்கத்தின் குறிக்கோள் ஆகும். திறமை இருந்தும் சிலருக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடக்கூடாது என்பதற்காக, யாரும் புறக்கணிக்கப்படக்கூடாது என்பதற்காக இந்த இயக்கம் செயல்படும்.

சமத்துவம் சம வாய்ப்பு ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டு அறநிலை அரசியலை நாங்கள் முன்னெடுத்து செல்வோம். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது எங்களது நோக்கம் அல்ல. தேர்தலில் போட்டியிடமாட்டோம். ஆனால் எங்களது கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற கட்சிகளுக்கு ஆதரவளிப்போம். மக்களைத் தொடர்ந்து சந்திப்போம். சுற்றுப்பயணம் செய்வோம். விஜய்க்கு கூட்டம் கூடுவது அவரது உழைப்பும் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையும் தான்.

ஆனால் அவர் எம்.ஜி.ஆர். போல வர முடியுமா செயல்பட முடியுமா என்பதெல்லாம் இப்போது சொல்ல முடியாது. இந்தத் தேர்தலில் தி.மு.க.வுக்கும், விஜய்க்கும் தான் போட்டி. வருகின்ற 23-ந்தேதி காஞ்சிபுரத்தில் புதிய கட்சி தொடக்க விழா நடைபெறும் என்றார்.

பேட்டியின் போது பொதுச் செயலாளர் ஆர்.வி.ரஞ்சித் குமார், பிரேமலதா ரஞ்சித் குமார், ஜோதி ராமன், ஜோதி அம்மாள் உடன் இருந்தனர்.

## இன்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்




சென்னை, பிப்.20:
பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் இன்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இன்று மாலை 6.30 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொலி வாயிலாக தி.மு.க. மாவட்டச் செயலாளர் கூட்டம் நடைபெறுகிறது. மாவட்டச் செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' என்ற தலைப்பில் வீடு வீடாக மேற்கொள்ளும் பிரசார ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது.

## அரிவாளுடன் இன்ஸ்டாவில் வீடியோ பதிவிட்ட வாலிபர் கைது



கொடைக்கானல்,பிப்.20:
சுற்றுலா தலமான கொடைக்கானலுக்கு வரும் இளைஞர்கள் ஆர்வ மிகுதியில் பல்வேறு வீடியோக்களை எடுத்து அதனை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். ஆபத்தான கொண்டை ஊசி வளைவுகளில் அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளில் செல்வது, தடை செய்யப்பட்ட அருவிகள், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு சென்று அதன் அனுபவங்களை தங்கள் சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

இது போல கடந்த சில நாட்களாக கையில் மிகப்பெரிய வாளுடன் திரைப்பட பாடல் பின்னணியில் வாகனங்களில் அமர்ந்தவாறு வீடியோ எடுத்து வாலிபர் சமூக வலைதள பக்கத்தில் வீடியோ பதிவிட்டு இருந்தார்.

இந்த வீடியோ வைரலான நிலையில் இது குறித்து கொடைக்கானல் போலீஸ் இன்ஸ்பெக்டர் வசந்தகுமார், சப்-இன்ஸ்பெக்டர் அபினேஷ் தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டனர். போலீசார் விசாரணையில் வீடியோவை பதிவிட்டவர் மேல்மலை கிராமம் பூம்பாறையைச் சேர்ந்த செல்வக்குமார் (25) என தெரிய வந்தது.

இதனையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். வீடியோவில் பதிவு செய்த வாள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருட்களையும் கைப்பற்றினர். பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சமூக வலைதளங்களில் இது போன்று வீடியோ பதிவிடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஶ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மூன்றாம் பிறை சந்திர தரிசனம்

### திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு



செய்யாறு பிப்.20:
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஶ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் யாக வேள்வி பூஜை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடும், மூலவரான ஶ்ரீ காமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது.

முன்னதாக அம்பாள் நெற்றியில் தோன்றும் மூன்றாம் பிறை சந்திர தரிசன நிகழ்வு நடைபெற்றது. திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

கோயில் நிர்வாகத்தின் சார்பில் பக்தர்களுக்கும் ,பொது மக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

## தென்காசியில் நகைக்கடை உரிமையாளரை கடுமையாக தாக்கிய கும்பல்



தென்காசி, பிப்.20:
தென்காசி நகரப்பகுதியை சேர்ந்தவர் ஹர்ஷத். இவர் தென்காசி நகரின் மையப்பகுதியில் உள்ள அம்மன் சன்னதி பஜாரில் நகைக்கடை நடத்தி வருகிறார்.

இவரிடம் சில மாதங்களுக்கு முன்பு அதே சன்னதி பஜாரில் நகைக்கடை நடத்தி வரும் உரிமையாளரான காலிப் என்பவர், தனக்குத் தெரிந்த ஒருவரின் 56 கிராம் நகை ரூ.3.5 லட்சத்திற்கு அடமானத்தில் உள்ளதாகவும், அந்த நகையை அடகில் இருந்து திருப்ப நீங்கள் பணம் கொடுத்தால், அவர் அந்த நகையை உங்களிடமே விற்பனை செய்வார் என கூறி உள்ளார்.இந்த நிலையில், ஹர்ஷத் தன்னிடம் இருந்த ரூ3.5 லட்சம் பணத்தை காலிப்பிடம் கொடுத்து அந்த நகையை திருப்பிய நிலையில், அந்த நகை தரம் குறைந்த நகையாக இருந்துள்ளது.

அதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த ஹர்ஷத் இது தரம் குறைந்த தங்கம் எனவும், இது எனக்கு வேண்டாம் தன்னுடைய பணத்தை திருப்பி தாருங்கள் என கூறியுள்ளார்.

ஆனால், பணத்தை திருப்பி தராமல் காலிப் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக ஹர்ஷத் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று இரவு ஹர்சத்தை, காலிப் உள்பட சிலர் பேச்சுவார்த்தைக்கு அழைத்து கடுமையாக தாக்கி உள்ளனர். இதுதொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையே இந்த சம்பவம் தொடர்பாக தென்காசி போலீசார் வழக்குப்பதிவு செய்து ஹர்சத்தை தாக்கிய காலிப் மற்றும் அவரது சகோதரர்களான அஸ்லம், ஹாஜி உள்ளிட்ட 4 பேரை பிடித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கவிதை நூல் வெளியீடு விழா




CSI செயிண்ட் ஜான் வெஸ்ட்டிரி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறும் புத்தகத் திருவிழாவில், திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க அரங்கில் , கவிஞர் ஹரிஹரன் வீரப்பன் எழுதிய " என் பார்வையில்" கவிதை நூல் வெளியீடு விழா நேற்று முன்தினம் (18.02.2026) நடைபெற்றது. **ஶ்ரீகாந்த் திருச்சி**

# கவிதை அரங்கம்!






உறுதியும்
விடாமுயற்சியும்
உங்களை ஒரு
வெற்றிகரமான
நபராக மாற்றும்

மகத்தான சாதனை
புரிந்தவர்கள் யாவருமே
தோல்வி பல கடந்து
வென்றவர்களே

மலையைப் பார்த்து
மலைத்து விடாதே
மலை மீது ஏறினால்
அதுவும் உன் காலடியில்

மனமும்
மகிழ்வில்
உன் விழிகளில்
என்னை காண்பதால்

## வாழ்க்கை தத்துவம்...



வாழ்வின் அர்த்தம்
நிம்மதியில் அல்ல
முயற்சியில் மறைந்திருக்கிறது

நிம்மதியாக வாழ்வது
ஒரு திறமை
எல்லாருக்கும் வராது

பயம் ஒரு மாயை
அதை எதிர்கொண்டால்
அது மறைந்து விடும்

சில பாதைகள்
குழப்பமாக இருக்கும்
ஆனால் அது சரியான
வழிக்கே அழைக்கும்

சில நாள் மழையாக இருக்கும்
சில நாள் வெளிச்சமாக
அதுதான் வாழ்க்கை

# ஆதர்ஷ தம்பதி !

' ரம்மு...அடியே ரம்மு !"

அடுக்களையில் இருந்த ரம்யா பாட்டி கணவரின் கிண்டலான அழைப்பைக் கேட்டு கடுப்படைந்து வெளிப்பட்டார்.

" தெரியாமத்தான் கேட்கறேன் ரம்யா ன்னு அழகா பேர் வச்சிருக்கா. அதெ ன்ன ரம்மு, விஸ்கின்னு கூப்ட றது!"

" அடேடே! ட்ரிங்க்ஸ் பேரெல்லாம் கரெக்டா சொல்றயே. சின்ன வயசில குடிக்கற பழக்கம் உண்டா ?" கலாய்த் தார் தாத்தா.

" ஆமா..அது ஒண்ணுதான் கொறை ச்சல்.." என்று வெறுப்புடன் கூறிய பாட்டி, தொடர்ந்து, " இனிமே அப்படி ஏடா கூடமா கூப்டா நான் திரும்பிப் பாக்க மாட்டேன் நியாபகம் வச்சுக் கோங்க !" என்று மிரட்டினார்.

" அடி ரம்மு உன்னை அப்படிக் கூப்டற துல ஒரு கிக் வரதுடி!"

" அப்படியென்ன கிக் வேண்டிக் கெடக்கறது ?..சரி. எதுக்கு இப்போ கூப்பிட்டேள்?"

" இல்ல.ஆமே வெறிச்சோடிக் கெ டக்கு! எல்லாரும் எங்க போயி ருக்கா?"

" தீம் பார்க்காம். அங்க போயிரு க்கா. நீங்க நன்னா அசந்து தூங் கிண்டிருந்தேள். எழுந்ததும் சொ ல்லச் சொன்னா. "

" நான் மூஞ்சி அலம்பிண்டு வரேன். லோடாவுல காஃபி ரெடி பண்ணி வை. சாப்டுட்டு நாமளும் கௌம்ப லாம்."

" எங்க கௌம்பறது ?"

" நம்ம நகர்ல இருக்கற பார்க்குக் குதான். "

"........."

" என்னடி யோசனை? உன்னையாரா வது கிட்நாப் பண்ணிடுவாளோன்னு பயமா?"

" ஆமா...நான் சின்னப்பொண்ணு பாருங்க! என்னத் தூக்கிண்டு போகப் போறா! "

" ஒருவேளை என்கூட வர வெட் கமா...அப்படின்னா ஒண்ணு செய்.நீ முன்னாடி நட.நான் பின்னாடி பத்தடி இடைவெளி விட்டு ஃபாலோ பண்றேன் !"

" ஐயோ ! ஏன் இப்படி அபத்தமாபேச றேள்?"
" சரி என்ன தயக்கம் சொல்லு!"

" இருங்க..மொதல்ல மூஞ்சி அலம் பிண்டு வாங்கோ . சூடா காஃபி போட்டு எடுத்துண்டு வரேன்."

தாத்தா முகம் அலம்பிண்ட கையோடு பாட்டி கொடுத்த காஃபியை ஒரே விழுங்கில் காலி செய்தார். லோட்டா வை அருகில் இருந்த டீபாமீது வைத் தார்.

" இப்போ சொல்லு !"

" வேற ஒண்ணுமில்ல.. இன்னிக்கு சாயங்காலம் டி.வியில நல்ல படம் போடறாளாம்! "
" படம் பேரென்ன?"
" ரம்பையின் காதல். "
" எத்தன தடவை பார்ப்பே?"

" அருமையான படம் ! சுடுகாட்டுல சாமியார் பாடற பாட்டை இன்னிக் கெல்லாம் கேட்டுண்டிருக்கலாம்!"

" அதாவது ' சமரசம் உலாவும் இடமே' ங்கற பாட்டுதானே ?"

" ஆமான்னா.."
" சரிதான் .உனக்கு வயசாகிடித்துங் கறத ப்ரூவ் பண்றே!"

" எப்படி ?"
" சுடுகாட்டப் பத்திப் பேசறயே!"

" ' சமரசம் உலாவும் இடமே'ங்குற பாட்டுல எவ்வளவு தீர்க்கமான அர்த்த ங்கள்! எல்லாக் காலத்துக்கும் பொரு த்தமான சாகாவரம் பெற்ற பாட்டு !"

" சரி..." என்றவர் பாட்டி அருகில் வந்து நின்றார்

" அப்போ நான் டிரஸ் பண்ணிண்டு கௌம்பவா...ரம்பையின் காதலா இல்ல ரம்யாவின் காதலாங்குறத நீ முடிவு பண்ணிக்கோ!"

சட்டென பாட்டியின் கன்னம் வெட்க த்தில் சிவந்தது. கணவரை ஓரக் கண் களால் பார்த்து புன் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

தாத்தாவுக்கு உடனே குஷி வர தன் பொக்கை வாயால் ' உய்' யென்று விசிலடித்தார.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"
"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"
"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"
"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"
"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"

# தினம் ஒரு சமையல்



## முட்டை கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| முட்டை | -4 |
| பெரிய வெங்காயம் | -3 |
| தக்காளி | -1 |
| டம்ளர் பால் | -2 |
| தண்ணீர் | -1/2 டம்ளர் |
| மஞ்சள் தூள் | -1/4 டீஸ்பூன் |
| மிளகாய் தூள் | -1 1/2 டீஸ்பூன் |
| கஸ்தூரி மேத்தி | -2 டேபிள் ஸ்பூன் |
| மல்லித் தூள் | -1 டேபிள் ஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |
| நல்லெண்ணெய் | -5 டேபிள்ஸ்பூன் |
| கரம் மசாலா | -1/2 டீஸ்பூன் |
| மட்டன் கறி மசாலா | -2 டேபிள் ஸ்பூன் |

செய்முறை:

ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சேர்த்து வெங்காயம் மற்றும் உப்பு சேர்த்து நன்கு வதக்கவும்



வெங்காயம் நன்கு வதங்கியதும் நறுக்கி வைத்த தக்காளியும் சேர்த்து வதக்கவும்

தக்காளி வெங்காயம் இரண்டும் நன்கு வதங்கியதும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்

அதே கடையில் மீதமான எண்ணெயில் எடுத்து வைத்துள்ள அனைத்து மசாலாக்களையும் சேர்த்து கருகாமல் வதக்கவும்

மசாலாவில் முட்டையை உடைத்து ஊற்றி நன்கு கிளறவும்

முட்டை பாதி வெந்ததும் அதில் எடுத்து வைத்துள்ள வெங்காயம் மற்றும் தக்காளி கலவையை சேர்க்கவும் அதன் பின் பால் மற்றும் தண்ணீர் சேர்த்து ஐந்து நிமிடம் கொதிக்க வைத்து இறக்கினால் சுவையான முட்டை கிரேவி தயார்

## மணித்தக்காளி பயன்கள்



மணத்தக்காளி பழங்களை நன்றாக உலர வைத்து வற்றலாகப் பயன்படுத்தலாம். நீண்டநாள் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதன் வற்றல் சிறந்த மருந்து. பசியை அதிகரித்து உடலுக்கு போஷாக்கை வழங்கும். காய்ச்சல் காரணமாக நாவில் ஏற்படும் கசப்பு மற்றும் வேறு காரணங்களால் ஏற்படும் வாந்தி உணர்வைக் கட்டுப்படுத்தும் உணவுப் பொருளாகவும் மணத்தக்காளி வற்றலைப் பயன்படுத்தலாம்.

நுரையீரல் தொடர்பான பிரச்னைகளைத் தீர்க்கவும் இதன் வற்றல் பயன்படுகிறது. சிறுநீர் பெருக்கை அதிகரித்து, சிறுநீர்ப்பாதை தொடர்பான நோய்களையும் குணமாக்கும். வற்றலை லேசாக நெய்யில் வதக்கிய பின்பு பயன்படுத்தலாம்.

புண் போக்கும் சாறு:

வாய்ப்புண் இருக்கிறதா? மணத்தக்காளி இலையைப் பிழிந்து சாறு எடுத்து தண்ணீரில் கலந்து குடிக்க, வாய்ப்புண் மறையும். இதை வாய்க் கொப்பளிக்கும் நீராகவும் வாய்ப்புண் இருப்பவர்கள் பயன்படுத்தலாம்.

மணத்தக்காளி இலைகளோடு பருப்பு சேர்த்து கடைந்து, அதன் வற்றலையும் துணைக்குச் சேர்த்து 'மணத்தக்காளி பருப்புக் கடைசல்' சமைக்கலாம். வயிற்றுப் புண், ரத்தக்குறைவு, உடல்சோர்வு போன்றவற்றை நீக்கும் மருந்தாக இந்தப் பருப்புக் கடைசல் பயன்படும். நோய் நீக்குவது மட்டுமன்றி சுவையாகவும் இருக்கும். உடல் ஊட்டம் குறைந்த குழந்தைகளுக்கான ஊட்ட உணவாகவும் இதை உபயோகிக்கலாம்.

மணத்தக்காளி கீரையுடன் பசலைக்கீரை சேர்த்து சமைத்து சாப்பிடுவது, வேனிற்கால நோய்களைத் தடுப்பதற்கான சிறந்த உணவு. மணத்தக்காளியை கீரையாகப் பயன்படுத்த, சளி, இருமல் போன்ற கப நோய்களும் விலகும் என்கிறது சித்த மருத்துவம். மணத்தக்காளி செடியை அரைத்து நீரிலிட்டுக் காய்ச்சி, அந்த நீரைக்கொண்டு புண்களைக் கழுவலாம்.

# ரீ-ரிலீஸாகும் அஜித்தின் துணிவு படம்.. முன்பதிவில் செய்துள்ள வசூல்



ரசிகர்களால் மாபெரும் அளவில் கொண்டாடப்பட்ட திரைப்படங்களில் ஒன்று துணிவு. இயக்குநர் ஹெச். வினோத் இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவான இப்படம் 2023ஆம் ஆண்டு வெளியானது.

இப்படத்தில் அஜித்துடன் இணைந்து மஞ்சு வாரியர், தர்ஷன், சமுத்திரக்கனி, அமீர் மற்றும் பாவ்னி என பலரும் நடித்திருந்தனர். 2023ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வெளிவந்த துணிவு படம் உலகளவில் ரூ. 210 கோடி வசூல் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சினிமாவில் ரீ-ரிலீஸ் தான் தற்போதைய ட்ரெண்ட். கில்லி, மங்காத்தா, படையப்பா, சச்சின் ஆகிய படங்கள் ரீ-ரிலீஸில் மாபெரும் வசூல் செய்தன. இதை தொடர்ந்து நாளை கில்லி படத்தை மீண்டும் ரீ-ரிலீஸ் செய்கின்றனர்.


இந்த நிலையில், அஜித்தின் துணிவு படமும் நாளை ரீ-ரிலீஸ் செய்யப்படுகிறது. மங்காத்தா படத்தை தொடர்ந்து ரீ-ரிலீஸ் ஆகவுள்ள அஜித்தின் துணிவு படத்தை கொண்டாட ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். இந்த நிலையில், இதுவரை நடைபெற்ற முன்பதிவில் துணிவு படம் ரூ. 15 லட்சம் வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.






கயாடு லோஹர் தற்போது மஞ்சள் நிற சேலையில் கியூட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# சோப்பு விளம்பரத்தில் நடிக்க இத்தனை கோடி வாங்கினாரா நடிகை தமன்னா?




நடிகை தமன்னா இந்திய அளவில் அறியப்படும் நடிகையாக இருந்து வருகிறார். அவர் படங்களில் நடிப்பதை விட ஒரு பாடலுக்கு மட்டும் ஆடுவதன் மூலமாக அதிகம் சம்பாதித்து வருகிறார்.

அவர் டான்ஸ் ஆடும் பாடல்கள் பெரிய ஹிட் ஆவதால் ஒரு பாடலுக்கே மிகப்பெரிய தொகையை சம்பளமாக பெறுகிறார்.

சமீபத்தில் தமன்னா ஒரு பிரபல சோப்பு நிறுவனத்தின் விளம்பரத்தில் நடிப்பதற்காக ஒப்பந்தம் ஆகி இருந்தார். அது சில சர்ச்சைகளையும் சந்தித்து இருந்தது.

அந்த விளம்பரத்தில் நடிப்பதற்காக தமன்னா 6.2 கோடி ரூபாய் சம்பளமாக பெற்று இருக்கிறாராம். இரண்டு வருடத்திற்கு இந்த தொகையை அவர் பெற்று இருக்கிறார்.

படத்தில் நடிப்பதை விட இதன் மூலமாக தமன்னா மிக அதிகமாக சம்பாதித்து இருக்கிறார்.

# பரம்பிக்குளம் வனத்தில் உள்ள கன்னிமாரா தேக்கின் மீதான தீராக் காதல்

பழங்குடி சமூகத்தின் சுற்றுச்சூழல் நம்பிக்கை.

தமிழ்நாடு -கேரளா வன எல்லைகளை இணைக்கும் ஒரு அற்புதக்காடு. பரம்பிக்குளம் வனம். கேரள எல்லையில் இருந்தாலும் நீலகிரியின் தொடர்ச்சியாக உள்ளது. அங்கு இருக்கும் பழங்குடியின மக்களின் உதவியோடு சுற்றுலா சென்று வருவது வாடிக்கையாகவே இன்றளவும் உள்ளது.

அடர்ந்த காட்டினுள் செல்வது அவ்வளவு சுலபமல்ல வன விலங்குகளும் அங்கு இருக்கின்றன என்றாலும், கேரள எல்லைக்குள் பாதுகாப்பிற்கு பழங்குடியின மக்கள் உத்தரவாத்துடன் உதவுதல் என்பது அசாத்தியமானது. இங்கு தேக்கு மரங்கள் சக்தி வாய்ந்ததாகவும், தெய்வீகத் தன்மை கொண்டதாகவும், வன தேவதை ஆவியாகவும் உலா வருவதாகவும் நம்புகின்றனர்.






தேக்கு மரங்கள் பல தலைமுறைகளைக் கடந்து வெட்டப்படாமல் கன்னியாகவே உள்ளது பல நூற்றாண்டுகளைக் கடந்து உயரமாகவும் வலுவாகவும் உள்ளது பல்வேறு காலகட்டங்களில் புயல், மழை, வெள்ள பாதிப்பிற்கு ஆளாகாமல் எவ்வித சேதாரம் இன்றி மாபெரும் ஆதாரமாக இன்றும் பல பருவ காலங்களைக் கடந்து நிலைத்து நிற்கின்றன.

அதிசயத்தக்க அந்த இடத்தில் செல்லும்போதும் மரத்தை தொடும் போதும் ஆசீர்வதிப்பான உணர்வும், பாதுகாப்பான உணர்வும், தெய்வீக அருளும் நம்மை சூழ்ந்து ஆனந்தத்தை அள்ளித் தருகிறது. மாசற்ற மரங்களின் தூய்மையான புனித காதலால் நாம் வசப்படுகிறோம்.

உலகின் பழமையான தேக்கு மரங்களில் ஒன்றாக அறியப்படும் மாபெரும் தேக்காக கன்னிமாரா தேக்கு உள்ளது அங்கு இருக்கும் மற்ற மரங்களும் அப்படியாகவே வளர்ந்து வருகிறது. யாரும் வெட்டுவதுமில்லை எடுப்பதும் இல்லை சிறு குச்சிகளை கூட பொறுக்குவதும் இல்லை. நீண்டகால பாரம்பரிய பரம்பிக்குளம் கன்னிமாரா காடுகள் கன்னிமாரா தேக்கு நம்பிக்கையால் காலத்தால் வளர்க்கப்படுகிறது காதர் ,மலசார் பழங்குடியின சமூகத்தின் தாயகமாக இருந்த நிலையில் சக்தி வாய்ந்த ஆன்மா இங்கு இருப்பதாக நம்பி இயற்கையுடன் இணைந்து இன்னும் அவர்களின் வாரிசுகள் நம்பிக்கையோடு வாழ்கிறார்கள்.

மரங்களைச் சுற்றிய அமைதி மொழி மனதிற்கு இடம் அளிக்கிறது காதில் இனிமையான புரிதலை செலுத்தி சிந்தனையை சீராக்கப்படுவதாக உணர முடிகிறது. மரங்களின் மீது காதல் கொள்ள முடிகிறது.

பிரிட்டிஷ் கால இந்தியாவில் தேக்கு மரம் பிரவுன் கோல்டு என அழைக்கப்பட்டு வனங்கள் வெட்டப்பட்டன. பழங்குடிகளின் வாழிடமான கன்னிமாரா காட்டிக் கொடுக்கப்படவில்லை பாதுகாக்கப்பட்டது .நம்பிக்கையால் பாதுகாப்பாக இன்றளவும் மதிப்பிற்குரியதாகவே இருப்பது வியப்பில்லை .இயற்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாத்து வரும் தலைமுறைகளிடத்தில் அடையாளப்படுத்துவது அனைவரின் கடமையாகும். உலகின் மிக பழமையான மரமாக அங்கீகரித்து கன்னிமாரா தேக்கு மரம் நமது இந்திய அரசாங்கத்தால் 1994-95இல் மகா விருச்சிக புரஷ்கார் விருது பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழ்ச்செம்மல்
-எறும்பூர்
கை.செல்வகுமார்.
எழுத்தாளர் - ஆய்வாளர்,
தலைவர்,
செய்யாறு வட்ட முத்தமிழ்ச் சங்கம், செய்யாறு.

## தினம் ஒரு தலைவர்கள்

# ஆலன் ஆக்டேவியன் ஹியூம் வரலாறு


ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (6 சூன் 1829 31 சூலை 1912), இங்கிலாந்தின் கென்ட் நகரில் ஜோசப் - மரியா தம்பதியின் எட்டாவது குழந்தையாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம் பிறந்தார். தந்தை ஜோசப் ஹியூம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஆலன் ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்று இந்தியாவில் 1850-ல் உத்தரப் பிரதேசத்தில் பணியைத் தொடங்கினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியைத் துவக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். எட்டாவா நகரில் 1856-ல் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆலன் தொடங்கினார். ஆலன் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் பிற்காலத்தில் அந்தப்பகுதி "ஹியூம் கஞ்ஜ்' என்று வழங்கப்பட்டு அது மருவி தற்பொழுது "ஹோம் கஞ்ஜ்' என அழைக்கப்படுகிறது.

1857-ல் சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு ஆங்கில மேலதிகாரிகளின் 1859 ஜனவரி சுற்றறிக்கையின்படி இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கைக்குப் பதிலாக 1859 மார்ச் 30-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலன் பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்: ""இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் முயற்சி அதிகமாக வேண்டும் என்று இதற்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் போட்ட உத்தரவு உள்ளது.

அதன்படி தொடர்ந்து கல்வி அறிவைப் பரப்புவது நல்லது. கல்வி அறிவு மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டால்தான் அது அரசுக்கு நன்மை பயக்கும். அறியாமையில் மக்களை அடக்கி வைப்பதால் கடைசியில் எதற்கும் அடங்காத ஆவேசம் மக்களுக்கு ஏற்பட்டு எதிர்ப்படும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் உடைத்தெறிந்துவிடுவார்கள் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் இருக்கின்றன.

மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டி அவர்களுடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில்தான் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

ஆங்கில அரசாங்கம் மேற்கொண்ட பற்பல சீர்கேடான நடவடிக்கைகளை ஆலன் வலுவாக எதிர்த்தார். எடுத்துக்காட்டாக, மதுக்கடைகளை ஆங்காங்கு விரிவுபடுத்தி அதனால் கிடைக்கும் ஏராளமான வருவாயை அரசாங்கம் ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்வதை ஆலன் கண்டித்தார். அதனால், குடிப்பழக்கத்துக்கு அடிமையான ஏழைகளின் குடும்பங்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் தனது வரி வசூலை மட்டும் கவனித்துக் கொண்டிராமல் மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்று 1860 மே மாதத்தில் ஆலன் எழுதிய அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.



ஆலன் தந்த ஆலோசனைகளையும், முற்போக்கான திட்டங்களையும் அப்பொழுது இருந்த ஆங்கில மேலதிகாரிகள் பலர் புறக்கணித்தாலும், வைஸ்ராய் பதவிக்கு வந்த மேயோ பிரபு, ரிப்பன் பிரபு போன்றோர் ஆலனின் ஆலோசனைகளை வரவேற்றார்கள். விவசாயத் துறையை மேம்படுத்த ஆலன் அளித்த ஆய்வறிக்கைகளைப் பார்த்த மேயோ பிரபு, அவற்றை நிறைவேற்ற ஆலன்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுத்து 1870-ல் ஆங்கில அரசின் வைஸ்ராய் தலைமையகத்தில் விவசாயம், வருவாய், வணிகம் உள்ளிட்ட துறையில் செயலாளராக ஆலன் நியமிக்கப்பட்டார்.


1876-ல் வைஸ்ராயாக வந்த லிட்டன் பிரபுவுடன் ஆலனால் பல பிரச்னைகளில் ஒத்துப்போக இயலவில்லை. குறிப்பாக, வெளிநாட்டு வணிக ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்புகளை ஆலன் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1876-78-ல் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஒரு கோடி மக்கள் மாண்டனர். அதற்கான தீர்வு ஆலன் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவை லிட்டன் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. உடனே, ஆலன் செயலாளர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டு அப்பொழுது இருந்த வடமேற்கு மாகாணத்தின் (தற்கால உத்தரப்பிரதேசம்) வருவாய்த் துறை வாரியத்தின் இளநிலை உறுப்பினராக அனுப்பப்பட்டார். அப்பொழுது இருந்த பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான முறையில் மிக நேர்மையான ஓர் அதிகாரி ஆட்சியாளர்களால் மிக மோசமாக நடத்தப்பட்டார் என்று கண்டித்தன.

1882 ஜனவரி முதல் நாளில் தமது அரசாங்கப் பதவியை ஆலன் துறந்துவிட்டார். அதன் பிறகு இந்திய மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று அவருக்கு இருந்தது. அது, ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்குச் செய்து வரும் அநீதிகளை வெளிப்படுத்தித் தக்க முன்னேற்றத்தைத் தர வேண்டும் என்பதை வலியுறுத்த இங்கிலாந்து சென்று, அங்கு இந்தியா பற்றிய ஓர் அமைப்பை உண்டாக்க அவர் திட்டமிட்டார். ஆனால், வில்லியம் வெட்டர்பர்ன் போன்று இருந்த நண்பர்கள் இங்கிலாந்துக்குச் செல்வதைவிட இந்தியாவிலேயே இந்திய மக்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள். இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவும் தக்கதொரு அமைப்பை உருவாக்க ஆலன் எடுத்த முதல் முயற்சி, கோல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு 1883, மார்ச் 1-ல் சிறந்ததொரு வெளிப்படையான வேண்டுகோளை வெளியிட்டார்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை வெள்ளிக்கிழமை 20.02.2026

## இண்டியா கூட்டணியை மம்தா, ஸ்டாலின் வழிநடத்த வேண்டும்: சிவசேனா (உத்தவ்) கட்சி ஆதரவு



**மும்பை, பிப்.20:**

சிவசேனா (உத்தவ்) கட்சியின் அதிகாரப்பூர்வ 'சாம்னா' நாளிதழில் ஒரு தலையங்கம் வெளியாகியுள்ளது.

அதில், "காங்கிரஸ் மற்றும் தேசத்தின் உச்ச தலைவராக மகாத்மா காந்தி இருந்தார். காந்திக்கு ஒரு உள் குரல் இருந்தது. அது, அவரது முடிவுகளை வழி நடத்தியது. ஆன்மீகம், தேச பக்தி மற்றும் தன்னலமின்மையால் அம்முடிவுகள் கூர்மைப்படுத்தப்பட்டன.

காங்கிரஸுக்குள் பல 'உள் குரல்கள்' உருவாகி குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இது நாட்டுக்கு ஆரோக்கியமானது அல்ல. தமிழகம் உட்பட 5 மாநிலங்களில் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் இந்த உள் குரல்கள் குழப்பத்தை மேலும் அதிகரித்துள்ளன. மணி சங்கர் அய்யர், சஞ்சய் பாரு உள்ளிட்டோரின் கருத்துகள் சிரமமான நேரத்தில் வெளிவந்து, காங்கிரஸ் விவகாரங்களை சிக்கலாக்குகின்றன" என கூறப்பட்டுள்ளது.

இண்டியா கூட்டணியின் தலைமை பொறுப்பை மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஊடக ஆலோசகர் சஞ்சய் பாரு அண்மையில் கூறியிருந்தார். "இண்டியா கூட்டணியை ஒருங்கிணைக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் சிறந்த மனிதர்" என்று காங்கிரஸ் மூத்த தலைவர் மணிசங்கர் அய்யர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துகளுக்கு 'சாம்னா' தனது தலையங்கத்தில் ஆதரவு தெரிவித்துள்ளது.

## 2027-ம் நிதியாண்டில் 2 சக்கர வாகன தொழில் 7-9 சதவீத வளர்ச்சி பெறும்: அறிக்கையில் தகவல்



**புதுடெல்லி, பிப்.20:**

நாட்டில் 2027-ம் நிதியாண்டில் 2 சக்கர வாகன தொழில் 7-9 சதவீத வளர்ச்சி பெறும் என அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. இதில், உள்ளூர் சந்தையானது தொடர்ந்து வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக இருக்கும் என்றும் ஜி.எஸ்.டி. விகிதம் சீரமைப்புக்கு பின்னர் போதிய அளவுக்கு மேம்படுத்தப்பட்ட உற்பத்தியும் காணப்படுவதும் இதற்கான காரணியாக இருக்கும் என கூறப்படுகிறது.

இதேபோன்று, ஏற்றுமதியும் தொடர்ந்து 3-வது ஆண்டாக, உள்ளூர் சந்தை விற்பனையை மிஞ்சும் வகையில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் சந்தையானது இந்த தொழிலின் மிக பெரிய அடிப்படையாக அமையும் என்றபோதிலும், அது மேம்படும் என்றும் அதிக எண்ணிக்கையிலான விற்பனையால் வருவாய் சீராக அதிகரிக்க கூடும் என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதில், அதிக திறன் வாய்ந்த மோட்டார் சைக்கிள்களுக்கு தேவை அதிக அளவில் இருக்கும். இதுவும் வருவாய் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

இந்த தொழிலில் ஒட்டுமொத்த அளவில் 95 சதவீதம் அளவுக்கு உற்பத்தி செய்ய கூடிய 6 வாகன தயாரிப்பாளர்களிடையே நடந்த ஆய்வின் முடிவில் அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. இதன்படி, 2027-ம் நிதியாண்டில் உள்ளூர் விற்பனை 80 சதவீதம் என்ற விகிதத்திலும், ஏற்றுமதி 20 சதவீதம் என்ற விகிதத்திலும் இருக்கும் என்றும் ஒட்டுமொத்தத்தில் 2.9 கோடி வாகனங்கள் உற்பத்தி இருக்கும் என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## 'பேரவையில் பங்கேற்காதவர்களை திரும்ப பெற வேண்டும்' - ஆந்திர சட்டப்பேரவை தலைவர்

**அமராவதி, பிப்.20:**

அமராவதி: ஆந்திர சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதன் தொடக்க நாளன்று, முன்னாள் முதல்வர் ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டி உட்பட அவரது கட்சியை சேர்ந்த 11 எம்.எல்.ஏக்கள், அவைக்கு வரும்போதே ஆளும்கட்சிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். அப்போது, அங்கிருந்த காவலாளிகள் மற்றும் போலீஸார் அவர்களை தடுத்தனர்.

இதுகுறித்து பேரவை தலைவர் அய்யண்ணபாத்ருடு அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர், பேரவைக்கு கண்டிப்பாக வர வேண்டும். சில எம்.எல்.ஏக்கள் பேரவைக்கு வருவதே இல்லை. சரியாக பேரவைக்கு வராத எம்.எல்.ஏக்களை திரும்ப பெறும் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும்" என்றார்.

## செய்தித்தாள் காகிதங்கள் மீதான 5% சுங்க வரியை நீக்க கோரிக்கை

**புதுடெல்லி, பிப்.20:**

இந்திய செய்தித்தாள் சங்கம் (ஐஎன்எஸ்) தலைவர் விவேக் குப்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் செய்தித்தாள் காகிதத் தேவை ஆண்டுக்கு 12 லட்சம் டன்னாக உள்ளது.

ஆனால், உள்நாட்டில் இதன் உற்பத்தி 5 லட்சம் டன்னை தாண்ட முடியாமல் திணறி வருகிறது. இதன் மூலம் மொத்த செய்தித் தாள் காகிதத்துக்கான தேவையில் 40 சதவீதத்தை மட்டுமே நம்மால் ஈடு செய்ய முடிகிறது.

கடந்த 2 தசாப்தங்களுக்கும் மேலாக இந்த இடைவெளி நீடித்து வருகிறது. செய்தித்தாள் காகித உற்பத்திக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவோ அல்லது விரிவாக்கம் செய்யவோ எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே, செய்தித்தாள் காகிதங்கள் இறக்குமதி மீது விதிக்கப்பட்டுள்ள 5% சுங்க வரியை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சபரிமலை தங்கக் கவச மோசடி: தந்திரி ராஜீவருக்கு ஜாமீன்




**சபரிமலை, பிப்.20:**

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடு வழக்குகளில் கோயில் தந்திரி கண்டரரு ராஜீவருக்கு ஜாமீன் வழங்கி நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவச மோசடி வழக்கில் 16-ஆவது நபராகவும், கருவறைக் கதவுகளின் தங்கக் கவசம் மோசடி செய்யப்பட்ட வழக்கில் 13-ஆவது நபராகவும் ராஜீவரு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். முறையானநடைமுறைகளை நிறைவு செய்யாமல் தங்கக் கவசங்கள் அகற்றப்பட்டது ராஜீவருக்கு தெரியும் எனவும், அதுகுறித்து 2019-இல் அவர் உரிய அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கவில்லை என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கேரள சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் இந்த வழக்குகளை விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், இரு வழக்குகளிலும் ராஜீவருக்கு நீதிமன்றம் புதன்கிழமை ஜாமீன் அளித்து உத்தரவிட்டது.

## திருமண வரவேற்பில் மணமகளை ரூபாய் நோட்டுகளை தூவி வரவேற்ற மணமகன் குடும்பத்தினர்



**சண்டிகர், பிப்.20:**

தமிழகத்தில் ஒவ்வொரு பகுதிகளிலும் திருமணம் என்பது மாறுபடும். திருமணத்தின்போது மணமகன், மணமகள் தரப்பில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள் கிராமத்துக்கு கிராமம் வேறுபடும். அந்த வகையில் பஞ்சாப்பில் திருமணத்தின்போது மணமகள் மீது பணநோட்டுகளை வீசி வரவேற்பது நீண்டகாலமாக நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் தற்போது ஒரு வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. பணமழை பெய்வது போல் மணமகள் மீது மணமகன் மற்றும் அவரது குடும்பத்தினர் ரூபாய் நோட்டுகளை அள்ளி வீசுகின்றனர்.

அதாவது மணமகள் திருமண நிகழ்ச்சி நடக்கும் இடத்தின் மையப்பகுதியில் வந்து நிற்கிறார். அவர் அருகே மணமகன் நிற்கிறார். அவர் தான் வைத்திருக்கும் பேக்கில் இருக்கும் பணத்தை எடுத்து மணமகள் மீது அள்ளி வீசுகிறார். இந்த நோட்டுகள் மழை போல் மேலிருந்து கீழாக மணமகள் மீது விழுகிறது. பண மழையில் மணமகள் நனைகிறார். மணமகள் நிற்கும் இடத்தை சுற்றிய தரை முழுவதும் ரூபாய் நோட்டுகள் நிரம்பி உள்ளன. இதனை அங்கிருந்தவர்கள் செல்போனில் வீடியோ எடுத்தனர். தற்போது அந்த வீடியோக்கள் இணையதளங்களில் வெளியாகி வருகிறது. மேலும் சமூக வலைதளங்களில் வீடியோ வைரலாகி வருகிறது. அதாவது பிப்ரவரி 14ல் பஞ்சாபின் தர்ன் தாரனில் நடந்த ஒரு திருமணத்தில், மணப்பெண் மீது ரூ.8.5 கோடி ரூபாய் நோட்டுகளை தூவி மணமகன் வரவேற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் திருமண நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த மேலாளர் கூறுகையில்,

விழாவில் ரூ.8.50 கோடி பயன்படுத்தப்படவில்லை. டாலர் நோட்டுகளையும் சேர்த்து மொத்தம் சுமார் 4 லட்சம் ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கோடிக்கணக்கான ரூபாய் என பரவும் தகவல் பொய்யானது என்றார்.

## உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றை கட்டமைத்துள்ளது இந்தியா! பிரான்ஸ் அதிபர்

**புதுடெல்லி, பிப்.20:**

டில்லி பாரத மண்டபத்தில் நடைபெறும் செய்யறிவு (ஏஐ) தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் சிறப்புரை ஆற்றினார். அப்போது, நமஸ்தே என்று தனது உரையைத் தொடங்கிய இமானுவேல் மேக்ரான், இந்த அற்புதமான நகருக்கு எங்களை வரவேற்றதற்கு நன்றி எனத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

"10 ஆண்டுகளுக்கு முன்பு, மும்பையில் சாலையோர வியாபாரி ஒருவரால் வங்கிக் கணக்குகூட தொடங்க முடியாத நிலையில் இருந்தார். முகவரி இல்லை, ஆவணங்கள் இல்லை போன்றவை காரணங்களாக இருந்தன. இன்று அதே வியாபாரி தனது தொலைபேசி மூலம் வாடிக்கையாளர்களிடம் பணத்தை பெறுகிறார்.

உலகில் எந்த நாடும் கட்டமைக்காத ஒன்றை இந்தியா கட்டமைத்துள்ளது. 140 கோடி ஆதார் அட்டை என்ற மக்களுக்கு டிஜிட்டல் அடையாளத்தை வழங்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் 2,000 கோடி ரூபாய் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் செய்யப்படுகிறது. 50 கோடி மக்களுக்கு டிஜிட்டல் சுகாதார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிடம் 140 கோடி மக்களை டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு கொண்டுவர முடியாது என்று உலக நாடுகள் 10 ஆண்டுகளுக்கு முன்பு கூறியது. அதை தவறு என்று இந்தியா நிரூபித்துள்ளது" எனத் தெரிவித்தார்.

## அசாம்: பல கோடி மதிப்பிலான 22 ஏக்கர் பரப்பிலான அபினி செடிகள் அழிப்பு

**திஸ்பூர், பிப்.20:**

அசாமின் ரைபிள்ஸ் படை பிரிவினர், சி.ஆர்.பி.எப். மற்றும் மணிப்பூர் போலீசார் இணைந்து, மணிப்பூரில் காங்போக்பி மாவட்டத்தில் செஷாங் பகுதியில் அதிரடி வேட்டையில் ஈடுபட்டனர்.

அந்த பகுதியில் சந்தேகத்திற்குரிய வகையிலான பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன என்று கிடைத்த உளவு தகவல் அடிப்படையில் அவர்கள் மேற்கொண்ட சோதனையின்போது, பல கோடி மதிப்பிலான சட்டவிரோத அபினி செடிகள் 22 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டு இருந்தது தெரிய வந்தது.

உடனடியாக அப்பகுதியை தங்களுடைய கட்டுக்குள் கொண்டு வந்து, போலீசார் அவற்றை அழித்தனர். இவற்றில் இருந்து 160 கிலோ எடை கொண்ட ஓபியம் தயாரிக்க முடியும். அவற்றின் மதிப்பு பல கோடி மதிப்பிருக்கும் என கூறப்படுகிறது.

இவற்றை அழித்தது, போதை பொருள் கும்பலுக்கு பெரிய இழப்பாக இருக்கும் என அசாமின் ரைபிள்ஸ் படை பிரிவின் ஐ.ஜி. தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, அவற்றை பதுக்கி வைக்க உதவியாக அப்பகுதியில் இருந்த 3 குடிசைகளும் அழிக்கப்பட்டன. இதுபோக அந்த வழியே சென்ற வாகனம் ஒன்றை மடக்கி விசாரித்ததில் ரூ.2.9 கோடி மதிப்பிலான சிகரெட் பண்டில்களும் கைப்பற்றப்பட்டு, சட்ட விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டன.

## அயோத்தி ராமர் கோயிலால் பொருளாதார மறுமலர்ச்சி: 2024-ல் 11 கோடியாக உயர்ந்த பக்தர்கள் எண்ணிக்கை



**புதுடெல்லி, பிப்.20:**

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்ட பிறகு அந்நகரில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி குறித்து லக்னோவின் இந்திய மேலாண்மை நிறுவனம் (ஐஐஎம்) விரிவான ஆய்வு நடத்தியது. 'பொருளாதார மறுமலர்ச்சி' என்ற தலைப்பிலான இதன் ஆய்வறிக்கை சமீபத்தில் வெளியாகியுள்ளது.

இதன்படி, ராமர் கோயில் திறப்பதற்கு முன் அயோத்திக்கு ஆண்டுக்கு சராசரியாக 1.7 லட்சம் பேர் வருகை தந்தனர். இது, 2024-ம் ஆண்டு ராமர் கோயில் பிராண பிரதிஷ்டைக்கு பிறகு, முதல் 6 மாதங்களிலேயே 11 கோடியை எட்டியது. இது வாராணசி மற்றும் பிற புனித தலங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். இதனால் அயோத்தியில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அயோத்தியில் சாதாரண கடைக்காரரின் சராசரி வருமானம் 5 மடங்கு அதிகரித்துள்ளது. நாள் ஒன்றுக்கு ரூ.400-500 ஆக இருந்த இந்த வருமானம் இப்போது ரூ.2,500 வரை உயர்ந்துள்ளது. அயோத்தியில் நிலத்தின் மதிப்பு, குறிப்பாக கோயிலுக்கு அருகில் 5 மடங்கு முதல் 10 மடங்கு வரை உயர்ந்துள்ளது. நகரின் ஜிஎஸ்டி வருவாய் ரூ.400 கோடியை எட்டியுள்ளது. இந்த நிதியாண்டில் சுற்றுலா மூலம் அயோத்திக்கான வருவாய் ரூ.10,000 கோடியை தாண்டும் வாய்ப்புகள் உள்ளன. கடந்த 2020ம் ஆண்டை விட 2025ல் தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் அதிகரித்துள்ளது. இது 2031-ல் 8,500 முதல் 12,500 வரை உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் 2021-ல் 200 உணவகங்கள் இருந்த நிலையில், தற்போது 2,000 உணவகங்கள் உள்ளன. 2021-ல் 500 ஆக இருந்த ரிக் ஷாக்கள் எண்ணிக்கை 2025-ல் 17,000 ஆக உயர்ந்துள்ளது. நகைக் கடைகள் மூன்றிலிருந்து 20 ஆக உயர்ந்துள்ளது. மேலும் வங்கிக்கிளைகள் 4 மடங்கு அதிகரித்துள்ளன.

உ.பி.க்கு வரும் சுற்றுலாப் பயணிகள் செலவிடும் தொகை ரூ.4 லட்சம் கோடியைத் தாண்டும் எனவும் இதில் அயோத்தி முக்கிய பங்கு வகிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அயோத்தியில் சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகள் ரூ.20 ஆயிரம் கோடி முதல் ரூ.25 ஆயிரம் கோடி வரை வரி வருவாயை உருவாக்கும். இவ்வாறு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பிரதமர் மோடி மார்ச் 1-இல் புதுச்சேரி வருகை! பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைக்கிறார்

**புதுச்சேரி, பிப்.20:**

புதுச்சேரி மாநில பாஜக தலைவர் வி.பி. ராமலிங்கம் புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது: பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 1 ஆம் தேதி புதுச்சேரிக்கு வர இருக்கிறார். லாஸ்பேட்டையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அன்றைய தினம் காலை 11 மணிக்கு ஏராளமான நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 2021-ல் என்ன தேர்தல் வாக்குறுதிகளை நாங்கள் கொடுத்தோமோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றியுள்ளோம். காங்கிரஸ்-திமுக கூட்டணி புதுச்சேரியில் ஆட்சிக்கு வந்தால் மகளிருக்கான ரூ.2500 உதவித்தொகை கண்டிப்பாக நின்றுவிடும். இவர்கள் எதிர்மறை அரசியல்தான் செய்வார்கள். ஆனால் பாஜகவை பொறுத்தவரை மத்தியிலும், புதுச்சேரியிலும் கூட்டணி ஆட்சியே நடத்துகிறது. இதுதான் இரட்டை என்ஜின் அரசு. அதனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மீண்டும் வந்தால் தான் புதுச்சேரி வளமடையும் என்றார் ராமலிங்கம்.

## டெல்லி கண்காட்சியில் சீன ரோபோ; மோடி அரசு இந்தியாவை கேலிப்பொருளாக்கியுள்ளது - காங்கிரஸ் தாக்கு

**புதுடெல்லி, பிப்.20:**

பிரதமர் மோடி கடந்த திங்கள்கிழமை டெல்லியில் செயற்கை நுண்ணறிவு(ஏ.ஐ.) உச்சி மாநாடு கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

இந்த கண்காட்சியில் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகள் முன்னிலையிலும் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் உத்தர பிரதேசத்தை சேர்ந்த கல்கோடியாஸ் பல்கலைக்கழக மாணவர்கள், ஆன்லைனில் விற்பனை செய்யப்படும் சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான சீனாவில் தயாரிக்கப்பட்ட 'யுனிட்ரீ கோ2' என்ற ரோபோ நாயை தாங்கள் தயாரித்ததாக கூறி ஏ.ஐ. மாநாட்டில் காட்சிப்படுத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆசிரியை ஒருவர், 'இந்த ரோபோ நாய் எங்கள் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது' என்று பேட்டியளித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இந்தியா மட்டுமின்றி, சீனாவை சேர்ந்தவர்கள் பலரும் அந்த ரோபோ நாய் தங்கள் நாட்டில் தயாரிக்கப்பட்டது என கருத்து பதிவிட்டுள்ளனர்.

இந்த விவகாரம் சர்ச்சையான நிலையில், ஏ.ஐ. உச்சி மாநாட்டில் இருந்து கல்கோடியாஸ் பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக வெளியேற உத்தரவிடப்பட்டது. இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து காங்கிரஸ் கட்சியின் 'எக்ஸ்' தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

"செயற்கை நுண்ணறிவில் மோடி அரசு இந்தியாவை உலக அளவில் கேலிப்பொருளாக்கியுள்ளது. இந்தியாவின் திறமை மற்றும் தரவை பயன்படுத்துவதற்கு பதிலாக ஏ.ஐ. உச்சி மாநாட்டில் சீன தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சீன ஊடகங்கள் நம்மை கேலி செய்கின்றன. இது இந்தியாவிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய சங்கடம் ஆகும்.

மோடி அரசாங்கம் இந்தியாவின் பிம்பத்துக்கு ஈடுசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நம்மிடம் இருக்கும் தரவுகளின் ஆற்றல் மூலம் உலக அளவில் செயற்கை நுண்ணறிவில் நாம் தலைமை தாங்க முடியும். ஆனால் மோடி அரசு செயற்கை நுண்ணறிவை நகைப்பிற்குரியதாக மாற்றி விட்டது." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவன் ஒடிஸாவில் கைது: 3 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர்

**புதுடெல்லி, பிப்.20:**

டில்லி காவல் துறை அதிகாரி கூறியதாவது: ஒடிஸாவைச் சேர்ந்த மனோஜ் கில்லோ, 2022- ஆம் ஆண்டு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போதைப் பொருள் தொடர்பான வழக்கில் அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அவரைக் கைது செய்வதற்கு வழிவகுத்த தகவல்களுக்கு ரூ.50,000 வெகுமதியும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பிப்.13-ஆம் தேதி மாலை 5.20 மணியளவில் கில்லோவை அவரது கிராமத்திற்கு அருகிலுள்ள பகுதியில் காவல்துறையினர் கைதுசெய்தனர். மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தலைமறைவாக இருந்த கில்லோ, குறிப்பிட்ட தகவல்களைச் சேகரித்த பிறகு, அவர் கைது செய்யப்பட்டார்.




## நாகர்கோவில் | வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக கூறி 130 பேரிடம் ரூ.1.50 கோடி மோசடி செய்தவர் கைது



**நாகர்கோவில், பிப்.20:** வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 130 பேரிடம் ரூ.1.50 கோடி மோசடியில் ஈடுபட்ட இளைஞர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை பெற்றுக்கொண்டு, வேலை வாங்கித் தராமலும், பணத்தை திருப்பித் தராமலும் ஏமாற்றியதாக கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ஸ்டாலினிடம் பாதிக்கப்பட்ட சிலர் புகார் அளித்தனர். எஸ்.பி. உத்தரவின்பேரில் குற்றப் பிரிவு போலீஸார் விசாரணையைத் தொடங்கினர்.

இதில், கன்னியாகுமரி மாதவபுரம் பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த ராம்குமார் மகன் சந்தோஷ்(31) என்பவர், மகாதானபுரத்தில் தனியார் ஏஜென்சி நடத்தி, துபாயில் உள்ள நிறுவனத்தில் வேலை வாங்கித் தருவதாக தெரிவித்து, 130 பேரிடம் தலா ரூ.2 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை பெற்றது தெரியவந்தது.

மேலும், பணத்தைப் பெற்றுக் கொண்டு வேலைக்கு அனுப்பாமலும், சிலரை விசிட்டிங் விசாவில் வெளிநாட்டுக்கு அனுப்பி ஏமாற்றியதும் தெரியவந்தது.

மதுரையில் பதுங்கல்... இவ்வாறு 130 பேரிடம் பணம் பெற்றுக்கொண்டு ரூ.1.50 கோடி மோசடி செய்துள்ளார். இதையடுத்து, மதுரையில் பதுங்கியிருந்த சந்தோஷை போலீஸார் கைது செய்தனர்.


இது தொடர்பாக குமரி எஸ்.பி. ஸ்டாலின் கூறும்போது, "புகார் பெற்ற 24 மணி நேரத்துக்குள் சந்தோஷ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமோ அல்லது அவரது நிறுவனத்திலோ யாரேனும் பணம் கொடுத்து ஏமாந்திருந்தால், குமரி மாவட்ட குற்றப்பிரிவில் நேரடியாகவோ அல்லது 94981 96976 என்ற எண்ணிலோ தொடர்புகொண்டு புகார் அளிக்கலாம்.

குண்டர் சட்டத்தில் நடவடிக்கை: வெளிநாட்டு வேலை வாய்ப்பின் உண்மைத் தன்மை மற்றும் ஏஜென்ட்டுகள் குறித்து ஏதேனும் சந்தேகம் இருந்தால் 70103 63173 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். வேலை வாங்கித் தருவதாக பணம் பெற்று ஏமாற்றுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்ந்து இச்செயல்களில் ஈடுபடுவோர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

## நிதி நிறுவனத்தில் கடன் வாங்கியவர் தற்கொலை முயற்சி: கட்டாய வசூல் நடவடிக்கை தடுப்பு சட்டத்தில் மேலாளர் கைது



**விழுப்புரம் / சென்னை, பிப்.20:** தனியார் நிதி நிறுவனத்தில் கடன் வாங்கியவர் தற்கொலை செய்ய முயன்ற வழக்கில், கட்டாய வசூல் நடவடிக்கை தடுப்புச் சட்டத்தில் நிதி நிறுவன மேலாளர் கைது செய்யப்பட்டார்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பென்னைவளம் கிராமத்தைச் சேர்ந்தவர் அப்பாஸ் (43). இவர் 2019-ல் தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.9.84 லட்சம் கடன் பெற்று, பொக்லைன் இயந்திரம் வாங்கியுள்ளார்.

வட்டியுடன் சேர்த்து 2025-ம் ஆண்டு வரை ரூ.15 லட்சத்து 97,660 செலுத்த வேண்டும். இதில் ரூ.5 லட்சத்து 20,680 மட்டுமே அப்பாஸ் செலுத்தி உள்ளார். மேலும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக தவணைத் தொகை செலுத்தவில்லை. ரூ.10.80 லட்சம் பாக்கி இருந்துள்ளது.

இந்நிலையில், பென்னைவளம் கிராமத்தில் தனது செங்கல் சூளையில் இருந்த அப்பாஸிடம் கடன் தொகையை வசூலிப்பதற்காக, தனியார் நிதி நிறுவன மேலாளர்கள் மூர்த்தி, தீபஜோதி, ஊழியர் தியாகலீசன் உட்பட 4 பேர் கடந்த 13-ம் தேதி சென்றுள்ளனர்.

கடன் தொகையை வசூலிப்பது தொடர்பாக இரு தரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, கைகலப்பில் முடிந்தது. இதனால் மனமுடைந்த அப்பாஸ், தன் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், உயர் சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து அப்பாஸ் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா (பிஎன்எஸ்) மற்றும் தமிழ்நாடு பணக் கடன் வழங்கும் நிறுவனங்களின் கட்டாய வசூல் நடவடிக்கை தடுப்பு சட்டத்தின் கீழ் திருவெண்ணெய் நல்லூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, நிதி நிறுவன மேலாளர் மூர்த்தியை கைது செய்தனர்.

கைது நடவடிக்கை... சட்டம்-ஒழுங்கு டிஜிபி (பொறுப்பு) வெங்கடராமன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு கடன் வழங்கும் நிறுவனங்கள் (கட்டாய வசூல் நடவடிக்கைகள் தடுப்பு) சட்டம் 2025 ஜூன் 9-ல் நடைமுறைக்கு வந்தது.

ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களை, குறிப்பாக விவசாயிகள், பெண்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினரை, தனியார் கடன் வழங்கும் நிறுவனங்களின் துன்புறுத்தல் அல்லது கட்டாய மீட்பு முறைகளிலிருந்து பாதுகாப்பதற்காக இந்த சட்டம் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த சட்டத்தின் கீழ் முதல் வழக்கை கீழ் திருவெண்ணெய் நல்லூர் போலீஸார் பதிவு செய்து, கைது நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு டிஜிபி தெரிவித்துள்ளார்.

## ரத்தக் குழாய் வெடித்த இளைஞருக்கு மறுவாழ்வு: ஸ்டான்லி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை

**சென்னை, பிப்.20:** திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 34 வயதான பார்த்திபன், சென்னையில் மின்சாதனப் பழுது நீக்கும் தொழிலாளியாகப் பணியாற்றி வருகிறார். கடந்த ஜனவரி மாதம் அவருக்கு முதுகெலும்பைப் பிளப்பது போன்ற தாங்க முடியாத வலியும், கடுமையான வயிற்று வலியும் ஏற்பட்டது.

தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், இதயத்திலிருந்து உடலின் முக்கிய உறுப்புகளுக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் பெருந்தமனி வெடித்திருப்பது கண்டறியப்பட்டது.

மேலும், சுமார் 1.5 லிட்டர் ரத்தம் கசிந்து நுரையீரல் மற்றும் மண்ணீரலை அழுத்தியதால், அவர் மரணத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்டார். தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு ரூ.15 லட்சம் முன்பணம் கேட்கப்பட்டதுடன், உயிருக்கு உத்தரவாதமும் அளிக்கப்படாததால், நம்பிக்கையிழந்த பார்த்திபன் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையை நாடினார்.

இதையடுத்து, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த ரத்த நாள அறுவை சிகிச்சை துறைத் தலைவர் டாக்டர் க.இளஞ்சேரலாதன் தலைமையில், த.ராஜ்குமார், வி.ராதாகிருஷ்ணா, வி.ஜி. விக்ரமன் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டனர்.




சில மணி நேரங்களிலேயே விலையுயர்ந்த செயற்கை ரத்தக்குழாய் உறை மற்றும் தேவையான ரத்தத்தை ஏற்பாடு செய்தனர். முதலில் பாதிக்கப்பட்ட இரைப்பை, குடல் மற்றும் சிறுநீரகங்களுக்கு ரத்த ஓட்டத்தைச்சீர்செய்ய மாற்றுப் பாதை உருவாக்கப்பட்டது.

தொடர்ந்து 'கேத் லேப்'வசதியைப் பயன்படுத்தி, நெஞ்சுக்கூடு முதல் வயிற்றுப் பகுதி வரை பெரிய உறை குழாய் (ஸ்டன்ட்) பொருத்தப்பட்டு, ரத்தக் கசிவு நிறுத்தப்பட்டது.

எந்நேரமும் கிருமி தொற்று, குடல் மற்றும் சிறுநீரக ரத்த ஓட்டத்தை பாதிக்கும் அபாயம் இருந்த போதிலும், ஸ்டான்லி மருத்துவமனை ரத்தநாள அறுவை சிகிச்சைத் துறை மருத்துவர்கள் பார்த்திபன் உயிரை காப்பாற்றினர். இந்த அறுவை சிகிச்சைக்கு ரூ.30 முதல் 40 லட்சம் செலவாகும் நிலையில், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் முதல்வர் காப்பீடு திட்டத்தின்கீழ் இலவசமாக முடிக்கப்பட்டது.

இதேபோல், காசநோயால் பாதிக்கப்பட்டு ரத்த வாந்தியுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட குப்பம்மாள் என்ற பெண்ணுக்கும் ஸ்டான்லி மருத்துவர்கள் மறுவாழ்வு அளித்துள்ளனர். அவருக்குப் பெருந்தமனி வெடித்து, நுரையீரல் மற்றும் உணவுக்குழாய் அழுத்தி, நெஞ்சுவலி ஏற்பட்டது கண்டறியப்பட்டது.

நுணுக்கமான முறையில் காலின் ரத்த நாளம் வழியாக நெஞ்சுக்கூட்டுப் பெருந்தமனிக்கு உறை குழாய் பொருத்தப்பட்டு அவரது உயிரையும் ரத்த நாள அறுவை சிகிச்சைத் துறை மருத்துவர்கள் காப்பாற்றினர்.

பல லட்சம் ரூபாய் வரை செலவாகும் மருத்துவ சிகிச்சையை தமிழக அரசின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எளிய மக்களுக்குச் சாத்தியமாக்கிய ரத்தநாள அறுவை சிகிச்சைத் துறை மருத்துவர்களை, மருத்துவமனை முதல்வர் டாக்டர் அரவிந்த் வெகுவாகப் பாராட்டினார்.

## காற்று மாசு ஏற்படுத்தும் வாகனங்களுக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்- சென்னை மாநகராட்சி நடவடிக்கை

**சென்னை, பிப்.20:** சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அதிகரித்து வரும் காற்று மாசினைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் "தூய்மையான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் 2025" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானக் கழிவுகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் முறையாக விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

காற்றில் கலக்கும் நுண் துகள்களைக் குறைக்கும் நோக்கில், விதிமீறல்களில் ஈடுபடும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். வாகனத்தின் மேல்புறம் மற்றும் நான்கு பக்கவாட்டுகளும் தார்பாலின் கொண்டு முழுமையாக மூடப்படாமல் இருத்தல். கட்டுமானப் பொருட்கள் அல்லது தூசிகள் சாலையில் சிதறும் வகையில் ஏற்றிச் செல்லுதல்.

நிர்ணயிக்கப்பட்ட அளவை விடக் கூடுதல் சுமை ஏற்றுதல் உள்ளிட்ட விதிமீறலில் ஈடுபடும் வாகனங்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும். மேலும், அபராதத் தொகையாக ரூ.25 ஆயிரம் அந்த இடத்திலேயே விதிக்கப்படும். பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள், அபராத தொகையை முழுமையாகச் செலுத்திய பின்னரே விடுவிக்கப்படும்.

சென்னை மாநகரைத் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கப் பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் முழு ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொளுத்தும் வெயில்- வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்தது



**வால்பாறை, பிப்.20:** கோவை மாவட்டத்தில் உள்ள மிக முக்கியமான சுற்றுலா தலங்களில் ஒன்று வால்பாறை.

இங்குள்ள தேயிலை தோட்டங்கள், இங்கு நிலவும் சீதோஷ்ண நிலையை அனுபவிக்க நாள்தோறும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் அதிகளிலான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருப்பர்.

அரசு விடுமுறை தினங்கள், வாரவிடுமுறை நாட்களில் இங்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருவர். அவ்வாறு வருபவர்கள் தேயிலை தோட்டங்களை கண்டு ரசித்தும், வால்பாறையில் உள்ள கூழாங்கல் ஆறு உள்ளிட்டவற்றையும் பார்த்து செல்கின்றனர்.

வால்பாறையில் கடந்த மாதங்களில் இதமான காலநிலை நிலவியதால், சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்பட்டது. இதனால் சுற்றுலா தொழிலை நம்பியிருக்கும் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஒரு மாதமாக வால்பாறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் கூழாங்கல் ஆறு, வெள்ளமலை ஆறு, சின்னக்கல்லாறு, இறைச்சிப்பாறை அருவி, அணைகளிலும் நீர்வரத்து குறைந்து வருகிறது.

இரவு நேரங்களில் கடும் குளிர் நிலவினாலும், பகல் நேரங்களில் வெயில் தனது உக்கிரத்தை காட்டுகிறது. இதனால் வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. விடுமுறை தினங்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூட சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்த அளவே இருந்ததை பார்க்க முடிந்தது.

## 2 பாம்பு பிடி வீரர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலைக்கான பணி ஆணை



**செங்கல்பட்டு, பிப்.20:** பத்மஸ்ரீ விருது பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த 2 பாம்பு பிடி வீரர்களின் வாரிசுகளுக்கு அரசு பள்ளியில் வேலைக்கான ஆணையை ஆட்சியர் சினேகா நேற்று வழங்கினார்.


செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுகுன்றம் அருகே சென்னேரி கிராமத்தில் இருளர் பழங்குடியினத்தைச் சேர்ந்த பாம்பு பிடி வீரர்களான வடிவேல், மாசி ஆகியோர் பத்மஸ்ரீ விருது பெற்றனர். இவர்கள் விலங்குகள் நல பிரிவில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவரும் அபாயகரமான மற்றும் விஷம் கொண்ட பாம்புகளை பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள். உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு பயணித்து கொடிய விஷமுள்ள பாம்புகளை பிடித்து சாதனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் வடிவேல் மகன் சுரேஷ், மாசி மகன் தங்கராசு ஆகியோருக்கு அவர்களின் கல்வி தகுதி அடிப்படையில் வண்டலூர் அருகேயுள்ள குமிழி அரசு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் தோட்டப் பராமரிப்பாளர் மற்றும் இரவு காவலர் பணி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பள்ளியில் பணி புரிவதற்கான நியமன ஆணையை ஆட்சியர் சினேகா நேற்று வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சுந்தர், அலுவலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 1,200 கனஅடியாக உயர்வு



**தருமபுரி / மேட்டூர், பிப்.20:** ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 1,200 கனஅடியாக உயர்ந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் கடந்த 13-ம் தேதி காலை விநாடிக்கு 300 கனஅடியாகப் பதிவான நீர்வரத்து 14-ம் தேதி காலை 200 கனஅடியாகக் குறைந்தது.

அன்று முதல் நேற்று முன்தினம் மாலை வரை 200 கனஅடியாகவே நீடித்த நீர்வரத்து, நேற்று காலை 1,200 கனஅடியாக உயர்ந்தது.

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 50 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 72 கனஅடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

தண்ணீர் திறப்பைவிட, நீர்வரத்து குறைவாக உள்ளதால் நீர்மட்டம் சரிந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் 89.87 அடியிலிருந்து 89.66 அடியாகவும், நீர் இருப்பு 52.50 டிஎம்சியிலிருந்து 52.27 டிஎம்சியாகவும் குறைந்துள்ளது.

## கச்சத்தீவு புனித அந்தோணியார் தேவாலய திருவிழாவிற்கான ஏற்பாடுகள் தீவிரம்

**ராமேசுவரம், பிப்.20:** இந்தியாவின் தென் எல்லையான ராமேசுவரம் தீவிலிருந்து 22 நாட்டிக்கல் மைல் தொலைவில் மன்னார் வளைகுடா கடலில் இந்திய-இலங்கைஎல்லையையொட்டி கச்சத்தீவு அமைந்துள்ளது. கடந்த 1974-ம் ஆண்டு வரை இந்தியாவுக்கு சொந்தமாக இருந்த இந்த தீவு பின்னர் இலங்கையுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாக அந்த நாட்டிற்கு வழங்கப்பட்டது.

இந்த தீவில் உள்ள பிரசித்தி பெற்ற புனித அந்தோணியார் தேவாலயத்தில் ஆண்டுதோறும் பிப்ரவரி இறுதி அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்தில் திருவிழா நடைபெறுவது வழக்கம். 2 நாட்கள் நடக்கும் இந்த விழாவில் இந்திய-இலங்கையை சேர்ந்த பக்தர்கள் இணைந்து கலந்து கொள்வார்கள்.

விழாவில் இரு நாட்டு மக்களும் சகோதரத்துவத்துடன் சந்தித்து தாங்கள் கொண்டு வந்த பொருட்களை பரிமாற்றம் செய்வது வழக்கம்.

இந்நிலையில், இந்தாண்டிற்கான திருவிழா வருகிற 27 மற்றும் 28-ந் தேதிகளில் நடக்கிறது. இதற்காக ராமேசுவரத்திலிருந்து 85 விசைப்படகுகள் மற்றும் 24 நாட்டுப்படகுகளில் 4 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர். படகில் செல்ல ஒருவருக்கு ரூ. 2 ஆயிரம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பம் கடந்த மாதம் 15-ந் தேதி முதல் 25 வரை வழங்கப்பட்டு பூர்த்தி செய்து பெறப்பட்டது.

கச்சத்தீவில் வருகிற 27-ந் தேதி மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் அந்தோணியார் தேவாலய திருவிழா தொடங்குகிறது. தொடர்ந்து திருஜெபமாலை, இரு நாட்டு மக்களும் சேர்ந்து தூக்கி வரும் சிலுவைப்பாதை நிகழ்ச்சி, நற்கருணை ஆராதனையும், இரவில் அந்தோணியாரின் சொரூபம் வைக்கப்பட்ட தேர் பவனியும் நடைபெறுகிறது.

மறுநாள் (பிப்.28-ந் தேதி) காலை 7.30 மணியளவில் சிறப்பு திருப்பலி பூஜையும், கூட்டுப்பிரார்த்தனையும், தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்று விழா நிறைவு பெறுகிறது.

இதில் இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து தலா 4 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருவிழாவிற்கான ஏற்பாடுகள் கச்சத்தீவில் நடைபெற்று வருகின்றன.

தேவாலயத்தை சுத்தம் செய்தல், சாலை அமைத்தல், தற்காலிக கப்பல் இறங்குதளம், முள் செடிகளை அகற்றி பாதை அமைத்தல், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளை ஏற்படுத்துதல், மின்சார வசதி உள்ளிட்ட பணிகள் தற்போது அங்கு நடைபெற்று வருகிறது.

மேலும், பக்தர்களின் வசதிக்காக மருத்துவ உபகரணங்களுடன் கூடிய தற்காலிக மருத்துவமனையும் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணிகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பேப்பர்பாய்

சென்னை வெள்ளிக்கிழமை 20.02.2026

# ரமலான் நோன்பு தொடங்கியது!

**சென்னை, பிப்.20:** புனித ரமலான் மாதத்துக்கான முதல் பிறை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை (பிப்.18) மாலை தென்பட்டது. இதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை (பிப்.19) முதல் புனித ரமலான் மாதத்தின் முதல் நோன்பு தொடங்குவதாக தமிழக அரசு தலைமை காஜி முஃப்தி என். பி. உஸ்மான் முஹியித்தின் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தார்.

மேலும், புதன்கிழமை இரவு முதல் பள்ளிவாசல்களில் புனித தராவீஹ் தொழுகைகள் நடைபெறும். இறை அருளும், அமைதியும் சூழும் இந்த ரமலான் மாதத்தில் அனைவரும் நோன்பு நோற்று, நற்செயல்களில் ஈடுபட்டு அல்லாஹ்வின் அருளைப் பெற வேண்டுகிறோம் என குறிப்பிடப்பட்டிருந்து.

இந்த நிலையில், தமிழகத்தில் புனித ரமலான் நோன்பு வியாழக்கிழமை(பிப்.19) முதல் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து பள்ளிவாசல்களில் நடைபெற்ற புனித தராவீஹ் சிறப்பு தொழுகைகளிஸ் இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

சென்னையில் உள்ள பள்ளிவாசல்களில் நடைபெற்ற சிறப்பு தொழுகைகளிஸ் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

# தமிழக மீனவர்கள் 22 பேர் இலங்கை கடற்படையினரால் கைது!



**ராமேசுவரம், பிப்.20:** எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 22 பேர் இலங்கை கடற்படையினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், அவர்களின் நான்கு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மற்றும் மண்டபம் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்கள் நான்கு படகுகளில் புதன்கிழமை மீன்பிடிக்க கடலுக்குள் சென்றுள்ளனர்.

இவர்கள் 22 பேரும் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், அவர்களை எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக வியாழக்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்களது விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. கைதான மீனவர்கள் 22 பேரையும் மன்னார் கடற்படை முகாமில் வைத்து இலங்கை படையினர் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருவது தமிழக மீனவர்களிடையே பெரும் அச்சத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்குமாறு அவர்களின் குடும்பத்தினரும் மீனவ அமைப்புகளும் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன.

# உரிமைத்தொகையை செலவு செய்துவிட்டதால் கோபித்துச்சென்ற மனைவி- கணவர் தற்கொலை

**வத்திராயிருப்பு, பிப்.20:** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே நெடுங்குளத்தை சேர்ந்தவர் ஈசுவரன் (வயது 32). இவருடைய மனைவி ராமு (28).

இவரது வங்கிக்கணக்கில் தமிழக அரசின் மகளிர் உரிமைத்தொகை ரூ.3 ஆயிரம். கோடை கால சிறப்பு நிதி ரூ.2 ஆயிரம் என மொத்தம் ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டது.

இந்த பணத்தை மனைவி ராமுக்கு தெரியாமல் ஏ.டி.எம். மூலம் எடுத்து ஈசுவரன் செலவு செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அறிந்த ராமு கணவருடன் வாக்குவாதம் செய்துள்ளார்.

இதனால் கோபித்துக்கொண்டு ராமு தனது தாய் வீட்டுக்கு சென்றார்.

இதனால் மனவேதனை அடைந்த ஈசுவரன் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து கூமாப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# திருச்செந்தூர் வெயிலுகந்தம்மன் கோயிலில் மாசித் தேரோட்டம் கோலாகலம்!



**திருச்செந்தூர்தி, பிப்.20:** ருச்செந்தூா அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த அருள்தரும் வெயிலுகந்தம்மன் கோயிலில் மாசித் திருவிழா பத்தாம் நாள் தேரோட்டம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூரில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆவணி மற்றும் மாசித் திருவிழாக்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். அந்தவகையில், மாசித்திருவிழா (பிப்.10) அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழா நடைபெற்ற ஒன்பது நாள்களும் காலை, மாலையில் சுவாமி-அம்பாள் பூஞ்சப்பரம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி, வீதியுலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டத்தை முன்னிட்டு வியாழக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது. அதன்பின்னர் காலை 7.30 மணியளவில் சர்வ அலங்காரத்துடன் அம்மன் தேரில் எழுந்தருளி நான்குரத வீதிகள் வழியாக வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

முருகப்பெருமான்-வள்ளி, தெய்வானை அம்பாள்களுடன் எழுந்தருளிய பெரிய தேரை திருக்கோயில் இணை ஆணையர் ராமு, உதவி ஆணையர் மெய்வேல், மண்டல தணிக்கை அலுவலர் இன்பமணி, தலைமை கணக்கர் அம்பலவாணன், பணியாளர்கள் மாரிமுத்து, ஆறுமுகராஜ், நெல்லையப்பன், கோயில் பாதுகாவலர்கள் மற்றும் திரளான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்.

விழாவையொட்டி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வந்தவண்ணம் உள்ளனர். பாதுகாப்பு பணியில் டிஎஸ்பி மகேஷ்குமார் தலைமையில் கோயில் இன்ஸ்பெக்டர் கனகராஜன், எஸ்ஐக்கள் சுப்பிரமணியன், பாஸ்கர் உள்ளிட்ட போலீசார் ஈடுபட்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை திருக்கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் கோயில் பணியாளர்கள் செய்துள்ளனர்.

# இலவச பயணம் செய்த பெண்களிடம் அவதூறாக பேசிய அரசு பஸ் டிரைவர்- கண்டக்டர் சஸ்பெண்டு




**காங்கேயம், பிப்.20:** திருப்பூர் மாவட்டம் காங்கேயம் போக்குவரத்து பணிமனையில் இருந்து 90-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் ஈரோடு, பழனி, தாராபுரம், கோவை, பல்லடம், கரூர், திருச்சி, பெருந்துறை, திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கு புறநகர் பேருந்துகளும் திருப்பூர், வெள்ளகோவில், முத்தூர் ஊதியூர், குண்டடம், கொடுவாய் ஆகிய பகுதிகளுக்கு நகர பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றது.

நகர பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்ய விடியல் பேருந்து திட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பேருந்துகளில் பெண்கள் இலவசமாக செல்வதற்கு பயண சீட்டுகள் வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் திருப்பூரில் இருந்து காங்கேயம் வந்த டி.என். 39 என் 0659 என்ற எண் கொண்ட பேருந்தில் காங்கேயம் ஹாஸ்டல் ஸ்டாப் பேருந்து நிறுத்தத்தில் இருந்து பெண்கள் சிலர் ஏறி உள்ளனர். பின்னர் கண்டக்டரிடம் மெடிக்கல் ஸ்டாப்பில் இறங்க வேண்டுமென டிக்கெட் கேட்டுள்ளனர்.

அதற்கு அந்தப்பேருந்தின் டிரைவர் மற்றும் கண்டக்டர் 2 ஸ்டாப் தானே உள்ளது, ஏன் நடந்து செல்ல முடியாதா? என அந்த பெண்களிடம் பேசியதுடன் உங்களுக்கு டிக்கெட் கொடுக்கப்பட மாட்டாது, நேராக பேருந்து நிலையத்திற்கு செல்கின்றோம். அங்கு பயணச்சீட்டு பரிசோதனையாளரிடம் உங்களை விட்டு விடுகிறோம் , நீங்கள் எல்லாம் அபராதம் ரூ.500 கட்டினால் மட்டும்தான் திருந்துவீர்கள் என கூறியதுடன்,நேராக பஸ் நிலையத்தில் இறக்கி விட்டுள்ளனர்.

இதனால் கண்டக்டருக்கும், பெண் பயணிகளுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்களை அங்கிருந்த போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் போலீசார் சமாதானம் செய்து வைத்தனர்.

இதனிடையே இந்த சம்பவத்தை சிலர் தங்களது செல்போனில் வீடியோ எடுத்து சமூகவலைதளங்களில் பதிவிட்டனர். அந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

தமிழக அரசு, அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செல்லலாம் என அறிவித்துள்ள நிலையில், நகரப்பேருந்துகளில் கண்டக்டர்கள் மற்றும் டிரைவர்கள் பெண்களிடம் இழிவாக பேசி அநாகரீகமாக நடந்து கொள்வது பெண்களிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே காங்கயத்தில் பெண் பயணிகளை இழிவாக பேசிய டிரைவர் மற்றும் கண்டக்டர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த சம்பவத்தை அறிந்த திருப்பூர் அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையின் அடிப்படையில் 2பேரையும் சஸ்பெண்டு செய்து உத்தரவிட்டனர்.

மேலும் 2பேரும் நடந்த விவரங்கள் குறித்து விளக்கம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# அரசியல் கட்சிகளின் பதிவு ரத்து: தேர்தல் ஆணைய உத்தரவுக்கு தடை விதிக்க உயர்நீதிமன்றம் மறுப்பு



**சென்னை, பிப்.20:** மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பதிவை ரத்து செய்த தேர்தல் ஆணைய உத்தரவுக்கு தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

தேர்தலில் கடந்த 6 ஆண்டுகளாக போட்டியிடாத அரசியல் கட்சிகள், தேர்தலில் போட்டியிட்டு செலவுக் கணக்கை தாக்கல் செய்யாத அரசியல் கட்சிகளின் பதிவுகளை இந்திய தேர்தல் ஆணையம் ரத்து செய்தது. தமிழகத்தில் 42 கட்சிகள் உள்பட நாடு முழுவதும் 474 கட்சிகளின் பதிவுகளை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், மனிதநேய ஜனநாயக கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம் உள்பட பல அரசியல் கட்சிகள் மனு தாக்கல் செய்தன. அதில், தங்களது கட்சிகளின் பதிவுகளை ரத்து செய்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும். தேர்தல் ஆணைய உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஏற்கெனவே விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில், அரசியல் கட்சிகளின் பதிவுகளை ரத்து செய்ய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை. தேர்தல் ஆணையத்தின் உத்தரவு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. கட்சிகளின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்ய முடியுமே தவிர, பதிவை ரத்து செய்ய முடியாது என வாதிடப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணையம் தரப்பில், தொடர்ந்து 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாத அரசியல் கட்சிகள், தேர்தல் செலவு கணக்குகளை தாக்கல் செய்யாத அரசியல் கட்சிகள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டப்படியான இந்த நடவடிக்கையை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளதாக வாதிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. அதில், மனுதாரர்களான கட்சிகள் 6 ஆண்டுகளில் உள்ளாட்சி, சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டதாகவும், கூட்டணிக் கட்சிகளின் சின்னங்களில் போட்டியிட்டதாகவும் கூறுகின்றன. ஆனால், அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் பெற்றுத்தான் தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

எனவே, அந்த உத்தரவுக்கு தடை விதித்தால் வருகிற சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற அந்தஸ்தை இக்கட்சிகளுக்கு வழங்கியது போல் ஆகிவிடும். எனவே, இந்த மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டனர். மேலும், தேர்தல் ஆணைய உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரதான வழக்கின் விசாரணையை மார்ச் இரண்டாவது வாரத்துக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.




# எதிரிகளையும், துரோகிகளையும் வேரறுக்க ஒன்றுபடுவோம் - ஆதரவாளர்களுக்கு சசிகலா அழைப்பு



**சென்னை, பிப்.20:** ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்திற்று ஆதரவாளர்களுக்கு சசிகலா அழைப்பு.

ஒன்றுபடுவோம், வென்று காட்டுவோம் என்று சசிகலா தெரிவித்துள்ளார்.

மதுரையில் வரும் 24-ந்தேதி நடைபெற உள்ள ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தையொட்டி ஆதரவாளர்களுக்கு சசிகலா அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

எதிரிகளையும், துரோகிகளையும் வேரறுக்க அனைவரும் கூட்டமாக ஒன்றுபடுவோம், வென்று காட்டுவோம் என்று தெரிவித்துள்ளார்.

கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளதாக கூறப்படும் நிலையில் ஒன்றுபடுவோம், வென்று காட்டுவோம் என சசிகலா கடிதம் எழுதி உள்ளார்.

சட்டசபை தேர்தலில் போட்டியிடுவது பற்றி வரும் 24-ந்தேதி சசிகலா அறிவிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# வேலூரில் விஜய் கூட்டத்துக்கு பூஜை!



**வேலூர், பிப்.20:** வேலூரில் நடைபெறவுள்ள தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கான பணிகள் பூஜையுடன் இன்று காலை தொடங்கப்பட்டது.

சேலத்தைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டம், அகரம்சேரியில் தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு கூட்டம் வரும் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெற உள்ளது.

அகரம்சேரியில் உள்ள 33 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் நடைபெறும் கூட்டத்துக்கான பணிகள் தொடங்குவதற்கு முன்னதாக, இன்று அதிகாலை பந்தகால் நட்டு பூஜை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தவெகவின் மாநிலப் பொறுப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக காவல்துறை கண்காணிப்பாளரிடம் நேரில் மனு அளித்த தவெக மாவட்ட நிர்வாகிகள், ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படும் இந்த மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு ஒரு தொகுதிக்கு 5 ஆயிரம் பேர் வீதம் 25,000 பேர் வரக்கூடும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கூட்டம் நடத்தப்படும் இடத்தை செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.யு.சிவராமன், கூட்டத்துக்கு வரக்கூடிய உத்தேச மக்கள் எண்ணிக்கை, வாகனங்கள் நிறுத்துமிடம், வாகனங்கள் வந்தும் செல்லக்கூடிய சாலைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், அடிப்படை வசதிகள், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

இதுதொடர்பாக எழுத்துப்பூர்வ விளக்கங்கள் கேட்டும் காவல் துறை சார்பில் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. தவெகவினர் அளிக்கும் விளக்கங்கள் அடிப்படையில் விஜயின் மக்கள் சந்திப்பு கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்படும் என கூறப்படுகிறது.

இந்த கூட்டம் நடைபெறும் நேரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. சென்னையில் இருந்து வேலூருக்கு சாலை வழியாக விஜய் பயணிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# “உள்ளாட்சி தேர்தலை நடத்தாத முதல்வர் ஸ்டாலின் ‘மாநில சுயாட்சி’ பற்றி பேசலாமா?” - தமிழிசை தாக்கு



**சென்னை, பிப்.20:** ‘ஓராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்த முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்’ என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘ஓராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்து மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் அதிகாரிகளை வைத்து நிர்வாகம் செய்து கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்.

தான் ஆளும் தமிழ்நாட்டில் மாநிலத்துக்கு உள்ளாக உள்ள முறையான அதிகார பகிர்வை, அதாவது உள்ளாட்சிகளுக்கு உரிமை கொடுக்க முடியாதவர், எல்லா மாநிலங்களுக்கும் சமமாக தனது நிர்வாகத்தை எந்த பாராபட்சமும் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கும் மத்திய அரசை பார்த்து குறை கூறிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் வளர்ச்சியை சொல்லி வாக்கு கேட்க முடியாத திராவிட முன்னேற்ற கழகம், மாநில சுயாட்சி என்று முதலில் கோரிக்கை வைத்து பின்பு தாங்கள் மத்தியில் ஆட்சியில் வரும்பொழுது அதை எல்லாம் மறந்து, இன்று மறுபடியும் தோல்வி பயம் வரும் பொழுது இதைப் போன்ற கோரிக்கைகளை கையில் எடுக்கிறார்கள். திமுகவின் தோல்வி பயத்தையே இது காண்பிக்கிறது’ என்று தமிழிசை குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் பேசியது என்ன?

முன்னதாக, “ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும்.

கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு” என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசியது குறிப்பிடத்தக்கது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com